# தமிழர் பொருண்மியம்

## வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 22

11.06.2023



சீட்லெஸ் மாம்பழங்கள், சாத்தியமா? 06

நஞ்சில்லா நல்லுணவு 12

எந்த ஆடு வளர்த்தால்அதிக லாபம் பெறலாம்? 16

# கட்டாயமாகிறது ‘வரிக் கோப்பு’!

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04




# டொலரின் வீழ்ச்சிப் போக்கும் பொருளாதார விளைவுகளும்

- ♦ டொலரின் பெறுமதி வீழ்ச்சி தொடருமா?
- ♦ இலங்கை ரூபா வலுவடைந்தது எவ்வாறு?
- ♦ டொலர் வருகை அதிகரித்தது எப்படி?
- ♦ டொலரின் வீழ்ச்சி ஏற்படுத்தும் தாக்கம் என்ன?
- ♦ தங்கத்தில் முதலீடு செய்ய இது உகந்த காலமா?

இலங்கையில் உச்சத்துக்குச் சென்றிருந்த டொலரின் பெறுமதி கடந்த சில வாரங்களாகத் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதற்குச் சமாந்தரமாகத் தங்க நகைகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. இதன் பின்னணியில் இருக்கக்கூடிய பொருளாதாரம் மற்றும் நிதி சார்ந்த விடயங்கள் தொடர்பாக தமிழர் பொருண்மியம் வார இதழுக்குப் பொருளாதார ஆய்வாளரும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம்.கணேசமூர்த்தி முக்கியமான கருத்துக்களை வழங்கியிருந்தார்.

**கேள்வி -** இலங்கை ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதி அண்மைக்காலத்தில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதாக ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தா?

**பதில் -** இது தொடர்பில் இரண்டு வகையான கருத்துக்கள் உள்ளன. அரசாங்கத்துக்குச் சார்பானவர்கள் இந்த ரூபாவின் பெறுமதி உயர்வை இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஒரு முன்னேற்றமாகக் காட்டுவதற்கு முற்படுகின்றார்கள். மற்றைய தரப்பினர் இதனை நுணுக்கமாக ஆராய்ந்து கருத்து வெளியிடும் போது, இது ஒரு தற்காலிகமான நிலைமை என்று



**- கலாநிதி எம். கணேசமூர்த்தி -**

சொல்கின்றார்கள். டொலருக்கான கேள்வி குறைவடைந்தமையும், இலங்கைக்குள் டொலரின் வருகை அதிகரித்திருப்பதும் இந்த நிலைமைக்குக் காரணம் என்பது

அவர்களுடைய கருத்து.

இந்த இரண்டாவது தரப்பினருடைய கருத்தையே நானும் ஆதரிக்கின்றேன். காரணம் – இலங்கையின் பொருளாதாரம் இப்போது சுருங்கியிருக்கின்றது. அதிகரிக்கப்பட்ட வரிகள் காரணமாக மக்களுடைய கொள்வனவு ஆற்றல் வெகுவாகக் குறைவடைந்திருக்கின்றது. பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் மிகக் குறைவடைந்திருக்கின்றது. இலங்கையிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் வெளிநாடுகளை நோக்கி நகர்கின்றன. இலங்கையின் உற்பத்தித் துறையில் பெரிய வீழ்ச்சி, இலங்கையின் நுகர்வில் மிகப்பெரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இந்த இரண்டும் டொலருக்கான கேள்வியைக் குறைத்திருக்கின்றன.

உள்நாட்டு முதலீடுகள் பெருமளவுக்கு அதிகரித்திருப்பதாகத் தெரியவில்லை. மறுபுறம் இலங்கையின் பணச் சந்தையில் முதலீடுகள் அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்றது. வெளிநாடுகளிலிருந்தும் டொலர் உள்வந்திருக்கின்றது. உல்லாசப்பயணிகளின் வருகை காரணமாக டொலர் வருகையில் தற்காலிகமான ஒரு அதிகரிப்பு அண்மைக்காலமாக அவதானிக்கப்படுகின்றது. எனவே, இந்தக் காரணங்கள் ஒருபுறம் டொலருக்கான கேள்வியைக் குறைத்திருக்கின்றது. மறுபுறம் இலங்கைக்குள் டொலர் வரும் அளவு சற்று அதிகரித்திருக்கின்றது. இதனால்தான் டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து, இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்திருக்கின்றது.

இதில் இன்னொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டும் – இலங்கை வெளிநாட்டுக் கடன் செலுத்துவதை முற்றாக நிறுத்தியிருக்கின்றது. இந்தக் கடன்களை மீளச் செலுத்துவதற்கு முற்படும்போது இந்த நிலைமை முழுமையாக மாற்றமடைவதற்கான சூழ்நிலை இருக்கின்றது. இதனைவிடப் பல பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடைகளை விலக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இதனால், இறக்குமதிகள் அதிகரித்து அதற்காக அந்நியச் செலாவணி வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இந்த நிலைமையில் மாற்றம் வரும் என எதிர்பார்க்கலாம்.

**கேள்வி –** டொலர் பெறுமதி வீழ்ச்சி இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?

**பதில் –** உடனடியான தாக்கங்கள் என்று பார்க்கின்றபோது இந்த டொலரின் பெறுமதி குறைகின்றபோது இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடையும். மறுபுறத்தில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் வெளிநாட்டுச் சந்தையில் அதிகரிக்கும். இலங்கையின் ஏற்றுமதி ஏற்கனவே தேக்கமடைந்துள்ள நிலையில் இந்த விலை அதிகரிப்பு ஏற்றுமதிச் சந்தைகளை இலங்கை இழக்க வேண்டிய நிலை வருமா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

சுருக்கமாகச் சொல்லப்போனால் இறக்குமதிப் பொருட்கள் இலங்கைச் சந்தையில் குறைந்த விலைக்குக் கிடைக்கும் அதே வேளையில், ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வெளிநாட்டுச் சந்தைகளில் அதிகரிக்கும். இதனால், வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கைப் பொருட்கள் போட்டித்தன்மை குறைந்ததாக மாறும். இதுதான் உடனடியாக ஏற்படக்கூடிய விளைவு.

**கேள்வி –** இந்த டொலரின் வீழ்ச்சிப் போக்கு நிலை தொடருமா? அல்லது இதில் மாற்றம் ஏற்படுமா?

**பதில் –** இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் இதனைச் சொல்லக்கூடியதாக இருக்கும். இலங்கை தற்போது டொலரின் உள்வருகையினைத் தற்காலிகமாக அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. வெளிநாட்டிலிருந்து இலங்கையர்கள் அனுப்பும் பணமும் ஓரளவுக்கு அதிகரித்திருக்கின்றது. அதேபோல, உல்லாசப்பயணிகளின் வருகை காரணமாக டொலர் வருகை சற்று அதிகரித்திருக்கின்றது. இந்த இரண்டும் தொடருமாக இருந்தால் ஓரளவுக்கு டொலரின் வருகை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

அதேவேளை, தற்காலிகமாகச் செயற்கையான விதத்தில் டொலர் வெளிச்செல்லும் அளவை அரசாங்கம் குறைத்து வைத்திருக்கின்றது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் போது இந்த நிலைமைகளில் ஓரளவுக்கு மாற்றம் ஏற்படும். அதேபோல, வெளிநாட்டுக் கடன்களை அரசாங்கம் மீளச் செலுத்த முற்படுகின்றபோது, மில்லியன் கணக்கில் டொலர் வெளியே செல்லவேண்டியிருக்கும். இவ்வாறு பெருமளவு பணம் வெளியே செல்லும்போது அதனை ஈடுகட்ட வேண்டிய விதத்தில் ஏற்றுமதி வருமானங்களோ அல்லது உல்லாசப்பணிகளின் வருகையோ அல்லது வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தின் அளவோ அதிகரித்தால் மட்டும்தான். இலங்கை ரூபாவின் பெறுமதியைத் தக்கவைத்துக்கொள்வதற்கான சாத்தியங்கள் உள்ளன.

ஆனால், நடைமுறையில் பார்க்கின்ற போது, இலங்கை இந்தக் கடன் மீளச்செலுத்தலை எப்போது ஆரம்பிக்கின்றதோ, அன்றைய தினத்திலிருந்து டொலர் இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் போக்கு காணப்படும். அதனை ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு இலங்கைப் பொருளாதாரம் ஏற்றுமதிகளை விரிவாக்கம் செய்வதோ அல்லது உல்லாசப் பயணிகளின் வருகையைப் பலமடங்கு அதிகரித்துக் கொள்வதோ அல்லது வெளியிலிருந்து பணம் அனுப்புபவர்கள் அதனை ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு அதிகளவு பணத்தை அனுப்புவதோ சாத்தியமானது என நான் கருதவில்லை.

ஆக, இப்போது ரூபாவின் பெறுமதி வலுவடைந்திருப்பது தற்காலிகமானதாக இருக்குமே தவிர, நெடுங்காலத்துக்கு நீடிக்கக்கூடியதாக இருக்கும் என நான் கருதவில்லை.

**கேள்வி –** டொலர் வீழ்ச்சிக்குச் சமாந்தரமாகத் தங்க நகைகளின் விலைகளும் குறைவடைந்திருக்கின்றன. நகைகளில் முதலீடு செய்வதற்கான காலமாக இதனைக் கருத முடியுமா?

**பதில் –** உலகச் சந்தையில் தங்கத்தின் விலையும் டொலரின் விலைக்கு ஏற்றவாறு அசைகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது, உலகச் சந்தையில் தங்கத்தின் விலையில் ஒரு தளம்பல் நிலை இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். அந்தத் தளம்பல் நிலை இலங்கையிலும் பிரதிபலிக்கின்றது. ஒருபுறம் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துச் செல்கின்ற காரணத்தினால் தங்கத்தின் விலையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. மறுபுறம், உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கின்ற தளம்பல் காரணமாகவும் தங்கத்தின் விலைகள் மாற்றமடைகின்றன. அதனைவிடச் சர்வதேசச் சந்தையில் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றமும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இப்போது இலங்கையில் தங்கத்தின் விலை சரிந்து செல்கின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இந்தச் சரிவு தொடருமா அல்லது மீண்டும் அதிகரித்து இரண்டு இலட்சம் என்ற நிலையை அடையுமா என்பது இந்த மூன்று காரணிகளிலும் தங்கியிருக்கின்றது. முதலாவது, இலங்கையின் பொருளாதாரம் அதன் அடிப்படையில் ஏற்படும் மாற்றம், இரண்டாவது அமெரிக்க டொலர் உலக சந்தையில் தன்னுடைய பெறுமதியை எந்தளவுக்குத் தக்கவைத்துக்கொள்கின்றது என்பது. மூன்றாவது உலக பொருள் சந்தையில் ஏற்படுகின்ற மாற்றம் தங்கத்துக்குச் சார்பாக அமைகின்றதா? இல்லையா? என்பதைப் பொறுத்தது. இந்த மூன்று காரணிகளின் அடிப்படையில்தான் இந்த நிலைமை அதாவது தங்க விலையின் வீழ்ச்சி தொடருமா? இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

இப்போது ஏற்பட்டிருக்கின்ற உள்நாட்டுக் காரணிகளை வைத்துப் பார்க்கின்ற போது இதனைத் தற்காலிகமான ஒரு நிலைமையாகத்தான் பார்க்க முடியும். பொருட்களின் விலை குறைகின்ற போது கொள்வனவு செய்வது சிறந்தது என்று மக்கள் கருதும் நிலையில் இப்போது கொள்வனவுக்கான காலம் என்றுதான் நான் கருதுகின்றேன்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# மீனவர் பிரச்சினை தீர்வே இல்லையா?

இலங்கையில் தமிழ் மீனவர்களின் பிரச்சினை திடீர் திருப்பங்கள் நிறைந்த ஒரு தொடர் கதையாகத்தான் இருக்கின்றது. போரினால், அதிகளவுக்குப் பாதிக்கப்பட்ட ஒரு துறையாக மீன்பிடித்துறைதான் இருந்தது. போரின் முடிவின் பின்னராவது தமது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு விடிவு கிடைக்குமா? என்று ஏங்கிய மீனவர்களுக்கு அதிர்ச்சிகள் மட்டும்தான் காத்திருந்தன. ஒரு புறம் கடற்படையின் ஆதரவுடன் சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பு. மறுபுறம் தமிழக மீனவர்களின் ஊடுருவல், இவற்றுக்கு மேலாகக் கடலட்டைப் பண்ணைகள் என்ற பெயரில் பாரம்பரிய மீன்பிடிக்கு ஆப்பு வைக்கக்கூடிய செயற்பாடுகள் என அவர்களின் வாழ்வாதார நெருக்கடி அதிகரித்திருக்கின்றதே தவிரக் குறைந்தபாடாகவில்லை.

யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுவின் கூட்டம் கடந்த வாரம் இடம்பெற்றபோதும் இந்தப் பிரச்சினை முக்கியமாக ஆராயப்பட்டிருக்கின்றது. ஆனால், இவற்றுக்கான தீர்வுகள் எதுவும் எந்தத் தரப்பாலும் முன்வைக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கு மக்களைப் பொறுத்தவரையில் விவசாயத்துக்கு அடுத்ததான மீன்பிடிதான் அவர்களுடைய பிரதான வாழ்வாதாரம். இலட்சக்கணக்கான குடும்பங்கள் இதனை நம்பியே உள்ளன. ஆனால், இதில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை அவர்கள் வேறு தொழில்களை நாடுவதற்கும், வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும் நிர்ப்பந்திக்கின்றது. அவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் எதனையாவது செய்வதற்கு அரசாங்கம் தயாராகவில்லை.

வடமாகாண மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை, இந்திய மீனவர்களின் ஊடுருவல்தான். வடக்கின் கரை வரையில் அவர்கள் வந்துசெல்கின்றார்கள். ஆயிரக்கணக்கில் ஊடுருவும் அவர்களை தம்மால் தடுக்க முடியாதிருப்பதாக கடற்படையினரே தெரிவித்துவிட்டார்கள். பாதுகாப்புத் தரப்புக்கு நாட்டின் மொத்த பட்ஜெட்டில் 20 வீதமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற போதிலும், இந்திய மீனவர்களின் வருகையை தம்மால் கட்டுப்படுத்த முடியாதிப்பதாக கடற்படையினர் தெரிவிக்கின்றார்கள். ஊடுருவும் இந்திய மீனவர்களும் இழுவை மடிப்படகுகளைப் பயன்படுத்துவதால் எமது கடல்வளம் கொள்ளையிடப்படுவதுடன் அழிக்கவும்படுகின்றது.

இது ஒருபுறம் இருக்க முல்லைத்தீவுப் பகுதியில் சிங்கள மீனவர்கள் ஆக்கிரமிப்பு அப்பகுதியில் பூர்வீகமாகவே கடற்றொழிலை நம்பி வாழும் தமிழ் மீனவர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது. தமிழ் மீனவர்கள் போரினால் அனைத்தையும் இழந்தவர்கள். ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்வதற்குத் தேவையான படகுகளோ, இயந்திர சாதனங்களோ அவர்களிடம் இல்லை. அதிநவீன சாதனங்களுடனும், கடற்படையினரின் ஆதரவுடனும் ஆக்கிரமிக்கும் சிங்கள மீனவர்களை அவர்களால் எதிர்கொள்ள முடியாதிருக்கின்றது. தொடர்ந்தும் பல்வேறு பக்கங்களிலிருந்தும் வரும் நெருக்கடிகளால் பாதிக்கப்படும் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க கடற்றொழில் அமைச்சர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்!

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## நம்பிக்கையளிக்கும் முயற்சிகள்

தமிழர் பொருண்மியம் வெளியிடும் பெரும்பாலான கட்டுரைகள் எமது பொருளாதாரத்தில் நாம் பலமாக இருக்க முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுப்பதாக அமைந்திருக்கின்றது. அந்த வகையில் கடந்த வாரம் ஜெகன் அருளையா எழுதிய, இயக்கச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய பண்ணை குறித்த கட்டுரை மிகவும் சிறப்பானதாக இருந்தது. எம்மவர்கள் தொழில் தேடியும், பொருளாதாரத்துக்காகவும் வெளிநாடுகளுக்குச் செல்வதை விட்டுவிட்டு, எமது பகுதியிலேயே பாரிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம். அவற்றில் வேலை வாய்ப்பைப் பெற்று முன்னேற முடியும் என்ற நம்பிக்கையை அந்தக் கட்டுரை ஏற்படுத்துகின்றது. இதன்மூலம் எமது பகுதியும் பொருளாதார ரீதியாக முன்னேற முடியும். இது போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு எமது இளைய சந்ததியினருக்கு நம்பிக்கையைக் கொடுங்கள்.

**என்.புவனேஸ்வரி. - கொக்குவில்.**

●●●

## பழங்குடிப் பெண்களின் நிலை

கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த பழங்குடிப் பெண்களின் வாழ்வியல் போராட்டம் குறித்த கட்டுரை, சமூகத்தில் தனித்து வாழும் ஒரு பகுதி மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தெளிவாக வெளிப்படுத்தியது. நேரடியாக இந்தப் பகுதிக்குச் சென்று இந்தக் கட்டுரையை எழுதிய காயத்திரி நளினிகாந்துக்கும் நன்றி சொல்ல வேண்டும். இன்றைய நவீன யுகத்தில் இவ்வாறாக ஒரு சமூகம் அடிப்படை வசதிகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாமல், பொருளாதாரத் தேவைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதற்குக் கடினமாக இருக்கின்றது. இவர்களுடைய அடிப்படைத் தேவைகளையாவது அரசாங்கமும், மக்கள் பிரதிநிதிகளும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**கே.விக்கனராஜா - லிங்கநகர், திருமலை**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

----------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------------------
**முகவரி** - ----------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------------------
**செலுத்திய தொகை** - -------------------------------------------
**செலுத்திய திகதி** - -------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவு ண்) தங்கத்தின் சந்தை விலை 1,46,750 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,60,100 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அதிகரிக்கும் வெயிலால் பொருளாதாரமும் பாதிக்கப்படுமா?

**பதில் -** நிச்சயமாக. கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் ரமித் டெப்நத் தனது குழுவினருடன் மேற்கொண்ட ஆய்வில், காலநிலை மாற்றத்தால் உருவாகும் வெப்ப அலைகள் நீடித்த வளர்ச்சி இலக்கை அடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்.

வறுமையை ஒழித்தல், ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல், வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட ஐ.நா. சபை அறிவித்துள்ள 17 நீடித்த வளர்ச்சிக்கான இலக்கினை அடைவதில் வெப்ப அலை சவாலாக இருக்கும் என்பதை இவர்களின் ஆய்வு உணர்த்துகின்றது. இது இலங்கைக்கும் பொருத்தமானது.

உலக அளவில் 3. 2 டிகிரி செல்சியஸ் அளவிற்கு வெப்பம் அதிகரித்தால் 2050-க்குள் உலக அளவிலான பொருளாதாரம் 18 சதவீதம் குறைய வாய்ப்பு இருப்பதாக சுவிஸ் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. 2050இற்குள் வெப்பம் அதிகரிப்பதை கட்டுப்படுத்தாமல் விட்டு 2.6 டிகிரி செல்சியஸ் உயர்ந்தால் பொருளாதார வளத்தில் அமெரிக்கா ஏழு சதவீதமும், கனடா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்றவை ஆறு முதல் பத்து சதவீத அளவிலான பொருளாதார இழப்பை சந்திக்கும் என்று ஆய்வு கூறுகிறது.

மலேசியா,பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற ஆசிய நாடுகளில் இருபது சதவீத அளவிலான பொருளாதார இழப்பும், இந்தோனேசியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் முப்பது சதவீதத்திற்கு மேல் இருக்கும் என்றும் கூறுகிறது. சொல்லப்போனால் சராசரியாக வெப்பம் 2.6 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால், ஒரு நாட்டின் வளத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவில் பொருளாதார இழப்பு ஏற்படும் என்று அந்த ஆய்வு எச்சரிக்கிறது.

இலங்கையும் இப்போது கடுமையான வெப்பத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஆண்டுகளைவிட அதிகளவான வெப்பம் இலங்கையில் பல்வேறு துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக, விவசாயத் துறையில் இதன் பாதிப்பு அதிகம். இது உற்பத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்த வல்லது.

இந்தப் பிரச்சினையிலிருந்து யாரும் தப்பியோடிவிட முடியாது. இருந்த போதிலும், இது தொடர்பாக இலங்கையில் ஆய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவும் இல்லை. இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான உபாயங்களும் வகுக்கப்படவும் இல்லை. காலநிலைமாற்றத்திற்கு உடனடித் தீர்வை அவ்வளவு எளிதாக எட்டிவிட முடியாது. எனினும் அதை எதிர்கொள்வதற்கான உபாயங்களை வகுத்துச் செயற்படுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 200/= |
| பச்சைமிளகாய் | - 300/= |
| தக்காளி | - 250/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 350/= |
| கரட் | - 400/= |
| பூசணி | - 100/= |
| புடோல் | - 240/= |
| வாழைக்காய் | - 140/= |
| சின்ன வெங்காயம் | - 400/= |
| பெரிய வெங்காயம் | - 130/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டக்காய் | - 180/= |
| கருணைக்கிழங்கு | - 240/= |
| பயற்றங்காய் | - 450/= |
| லீக்ஸ் | - 380/= |
| பீற்றூட் | - 400/= |
| கறிமிளகாய் | - 400/= |
| முருங்கைக்காய் | - 1200/= |
| போஞ்சி | - 500/= |
| கத்தரி - தம்புள்ள | - 150/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 189/= |
| கனடா டொலர் - | 212/= |
| சீன யுவான் - | 39/= |
| யுரோ - | 304/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 210/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 354/= |
| சுவிஸ் பிராங் - | 311/= |
| அமெரிக்க டொலர் - | 285/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 200/= |
| கனடா டொலர் - | 225/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 321/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 223= |
| ஸ்ரோலிங் பவுண் - | 373/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 299/= |



- பேராசிரியர்
ஆசி கந்தராஜா -



"காலாதிகாலமாக விதையில்லாத வாழை, அன்னாசிப் பழங்களையே நாம் சாப்பிட்டிருக்கிறோம். இதேவேளை ஒரு சில வாழை, அன்னாசி இனங்களில் விதைகள் இருப்பது பலருக்குத் தெரியாதது. விதைகளற்ற தர்ப்பூசணி மற்றும் திராட்சை இனங்கள், பிற்காலத்தில் இனவிருத்தி ஆராய்ச்சிகள் மூலம் உருவாக்கப்பட்டன"

# சீட்லெஸ் மாம்பழங்கள் சாத்தியமா?

2022ம் ஆண்டு வெளியான "கடைசி விவசாயி" திரைப்படத்தில் ஒரு காட்சி வரும். முதிய விவசாயி ஒருவர் தக்காளி விதைகள் வாங்கக் கடைக்குப் போவார். வியாபாரி தக்காளி விதைகளைக் காட்டி இது ஹைபிரிட் விதை, கொத்துக் கொத்தாய்க் காய்க்கும், கூடைகூடையாய் அள்ளலாமெனச் சிலாகித்துச் சொல்வார்.

ஓ... அப்படியா, அடுத்தமுறை நான் விதை வாங்கக் கடைக்கு வரவேண்டாமல்லவா. அறுவடைசெய்யும் பழங்களில் இருந்து விதைகளை எடுத்துப் போடலாம், என்பார். இல்லை, வந்துதான் ஆகணும். இதிலை விதையே இருக்காது.

அதெப்படி? ஈச்சமரம், இலந்தைமரம், மாமரம் எல்லாவற்றிலும் விதையிருக்கு. எப்படித் தக்காளிக்கு விதையில்லாமல் போகும்? இது முதியவரின் கேள்வி.

இது கலப்பு விதை, வெள்ளைக்காறன் செஞ்சது. விதை இருக்காது, என்பார் வியாபாரி.

அவனுக்கு மாத்திரம் எப்படி விதை கிடைச்சுது? இந்த விதையைக் கண்டுபிடிச்சவனுக்கு ஒரு ஆம்பிளைப் பிள்ளை பிறந்து, அதுக்கு விதைக்கொட்டை இல்லாமல் இருந்தால், அப்ப தெரியும் அவனுக்கு, எனச் சொல்லிவிட்டு விதையை வாங்காமலே போய்விடுவார் முதியவர்.

இந்தக் காட்சி என் மனதில் ஆழமாகப் பதிந்து இன்றுவரை நிலைத்திருப்பதற்கான காரணம் கொட்டையில்லாத பழங்களுக்கான மக்களின் அங்கலாய்ப்பும் அதை விருத்தி செய்ய முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சி முனைப்புக்களுமே.

காலதிகாலமாக விதையில்லாத வாழை,



அன்னாசிப் பழங்களையே நாம் சாப்பிட்டிருக்கிறோம். இதேவேளை ஒரு சில வாழை, அன்னாசி இனங்களில் விதைகள் இருப்பது பலருக்குத் தெரியாதது.

விதைகளற்ற தர்ப்பூசணி (Water Melon) மற்றும் திராட்சை இனங்கள், பிற்காலத்தில் இனவிருத்தி ஆராய்ச்சிகள் மூலம் உருவாக்கப்பட்டன.

தற்போது இணையத்தில் வைரலாகப் பரவிவரும் சீனமொழி வீடியோ பதிவொன்றில் விதை இல்லாத மாம்பழம் என்று ஒரு காட்சி வரும்.

இணைய வசதிகளைப் பாவித்து, யாரும் எதையும் பதிவிடலாம் என்ற நிலையே இன்று காணப்படுகிறது. இதில் உண்மையும், பொய்யும், போலியும் கலந்திருப்பது தவிர்க்கமுடியாதது.

அறிவியல் கோட்பாடுகளின்படி விதையில்லாத மாம்பழங்களை இனவிருத்தி செய்வது சாத்தியமே. ஆனால் நடைமுறையில் இது இலேசுப்பட்ட விஷயமல்ல. எனது தீவிர அறிவியல் தேடுதலின்படி விதையில்லாத மாம்பழம் இற்றைவரை இனவிருத்தி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. விதையில்லாத மாம்பழம் சந்தைக்கு வந்ததற்கான தகவல்களும் இல்லை.

விவசாயி திரைப்படத்தை என் னுடன் பார்த்த மனைவி, படத்தில் முதிய விவசாயி, வியாபாரியிடம் கேட்ட கேள்வியை என்னிடம் கேட்டார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம் — classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

-------------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

-------------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

-------------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

-------------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

-------------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

-------------------------------------------

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

-------------------------------------------

### SALE — விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

-------------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

-------------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

-------------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

-------------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

-------------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

-------------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

-------------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

-------------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448


வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

--------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடிரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

--------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

--------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

--------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

--------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

--------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு - 077 6566508.

--------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

--------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

--------------------------------------




### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

--------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

--------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

--------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

--------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப் படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 773853765

--------------------------------------




### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

--------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113





(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

விதையில்லாத காய்களும் கனிகளும் எப்படி இனவிருத்தி செய்யப்படுகின்றன? விதைகள் இல்லாத தக்காளி விதைகளை விற்பவர்களுக்கு அந்த விதைகள் எப்படிக் கிடைத்தன?

இந்தக் கேள்விகள் உங்கள் மனங்களிலும் எழுவது நியாயமானதே.

“இருமடிய“ (Diploid) தாவரங்களில் விதைகள் இருக்குமென்றும் “மும்மடிய“ (Triploid) தாவரங்கள் விதைகளற்ற பழுங்களைக் கொடுக்குமென்றும், மேலெழுந்த வாரியாகப் பதில் சொன்னேன்.

எனது சுருக்கமான பதிலால் எரிச்சலடைந்த மனைவி, ஊர் உலகத்திலை உள்ளவைக்கு ஆறஅமர இருந்து விலாவாரியாகப் பதில் சொல்லுங்கோ, எனக்குமட்டும் சொல்லேலாது எனக் கோபப்பட்டார்.

ஓர் உயிரினம் எப்படி அமையவேண்டும் என்ற தகவல்கள் எல்லாம் கலத்தினுள்ளே (Cell) நூல்போன்ற அமைப்புடைய குரோமசோம்களில் (நிறமூர்த்தம் – Chromosome) பதியப்பட்டிருக்கும். இவை பெரும்பாலும் சோடிசோடியாக இருக்கும். இவற்றை இருமடிய (Diploid) தாவரங்கள் என்போம். உலகில் பெரும்பாலானவை இந்த வகையே.



இதேவேளை மூன்று நிறமூர்த்தங்கள் சேர்ந்திருந்தால் அவை மும்மடியம் (Triploid) என்பர்.

இரண்டடுக்கு குரோமசோம் கொண்ட இருமடிய தாவரங்களில் விதைகள் இருக்கும். அவற்றை மூன்றடுக்கு குரோமசோம்கள்கொண்ட தாவரங்களாக மாற்றிவிட்டால், அவைகள் விதைகளற்ற காய் கனிகளைக் கொடுக்கும், அப்படித்தானே? என, எனது விளக்கத்தை இலகுவாக்கினாள் மனைவி. அவளும் அடிப்படை விஞ்ஞானம் படித்தவள்.

உண்மைதான். ஆதிகாலத்தில் எல்லா வாழைப்பழத்துக்கும் விதைகள் இருந்தன. அவை இன்றும் காடுகளிலும் மலைகளிலும் வளர்கின்றன.

ஓஹோ...!

கால ஓட்டத்தில் விதைகொண்ட வாழைகள், இனவிருத்தியடைந்து விதைகளற்றவை ஆகின.

எப்படி? இயற்கையாகவா செயற்கையாகவா?

அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் அல்லது இடி, மின்னல், வெப்பம் காரணமாக மிகமிக நீண்ட காலங்களூடாக, மூன்றடுக்கு குரோமசோம்கள் கொண்ட, விதைகளற்ற வாழைகள் இயற்கையாக விருத்தியடைந்தன.

மற்றத் தாவரங்களில்?

அவை செயற்கை முறையில் குறுகிய காலத்துக்குள் மாற்றப்பட்டவை. தர்ப்பூசணி, பப்பாளி போன்றவை இதற்கு நல்ல உதாரணங்கள்.

அப்போ, விதைகளற்ற தாவரங்களின் இனப்பெருக்கம்?

பதிய முறைகளின் மூலம்தான். வாழையில் குட்டிகள் மூலமும் திராட்சையில் தண்டுகள் மூலமும் பதியமுறை இனிப்பெருக்க முறையே கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால் பப்பாளி, தர்ப்பூசணி ஆகியனவற்றின் மும்மடிய விதைகளை வியாபார நிலையங்களில் வாங்கலாம். இந்த விதைகளைத்தான் திரைப்படத்திலுள்ள காட்சியில் முதிய விவசாயிக்கு, வியாபாரி விற்க முனைந்தது. இவ்விதைகளிலிருந்து முளைத்து வளரும் தாவரங்கள், காய்கனிகளைக் கொடுக்கும். ஆனால் அவற்றில் விதைகள் இருக்காது.

என்ன அதிசயமாய் இருக்கு! அவங்கள் விதை விக்கிறாங்கள். ஆனால் அற்றிலிருந்து வளர்பவை விதைகளைக் கொடுக்காது? இது கொஞ்சமும் லொஜிக்காக இல்லையே. இதைத்தானே அந்த முதிய விவசாயி படத்தில் கேட்டார்.

உண்மைதான். உதாரணத்துக்கு தர்ப்பூசணியை எடுப்போம். இதன் விதைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடம், நாலடுக்கு (Tetraploid) குரோமசோம்கள் கொண்ட தர்ப்பூசனித் தாவரம் இருக்கிறது. பெரும் பணம் செலவு செய்து, அதை ஆராய்ச்சி முலம் விருத்தி செய்திருப்பார்கள். இது அவர்களின் பணம்காய்க்கும் மரம். இதை அவர்கள் வெளியில் விடமாட்டார்கள். இதனுடன் இரண்டடுக்கு குரோமசோம்கள் (இருமடியம்) கொண்ட சாதாரண தர்ப்பூசணியை, மகரந்தச் சேர்கை முலம் கலப்பார்கள்.

ஓ...!

இக்கலப்பின் மூலம் உருவாகும் தாவரம், விதைகளை உற்பத்தி செய்யும். இந்த விதைகளைத்தான் விவசாயிகளுக்கு விற்பார்கள்.

இந்த விதைகளை விதைத்தால்?

அவை முளைத்து, வளர்ந்து பழம் கொடுக்கும். ஆனால் அதில் விதைகள் இருக்காது. இதுதான் நாமெல்லோரும் விரும்பும் சீட்லெஸ் தர்பூசனி! இது ஒருவகையில் பன்னாட்டு நிறுவனங்கள், உலக விவசாயத்தியில் செலுத்தும் ஆதிக்கம் என்றும் சொல்லலாம்.

எனது இந்த விளக்கம் மனைவிக்குப் புரியவில்லை என்பது அவளது முகத்தில் தெரிந்தது. இதிலும் இலகுவாக என்னால் இந்த விஷயத்தைச் சொல்ல முடியவில்லை.

உலகம் அழியப்போகுது. வேறொன்றுமில்லை, என பொதுவாகச் சொன்ன மனைவி, பிள்ளைகள் விரும்பி உண்ணும் சீட்லெஸ் தர்பூசனியை நறுக்கத் துவங்கினார்.




**‘வரி விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் காலப்போக்கில் மாறக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இலங்கையில் உள்ள தனிநபர்களுக்கான புதிய வருமான வரிக் கோப்பினைத் திறப்பது தொடர்பான மிகவும் புதுப்பித்த மற்றும் துல்லியமான தகவல்களுக்கு, இலங்கையின் உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்’**

# கட்டாயமாகிறது ‘வரிக் கோப்பு’



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையில், 01 ஜுன் 2023 முதல் பல துறையினருக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவுசெய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிதி மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தமானி அறிவித்தலொன்றை 31 மே 2023 வெளியிட்டுள்ளார்.

அதன்படி வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், வங்கி அதிகாரிகள், கட்டடக்கலை வல்லுநர்கள் எனப் பல துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு இந்த நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

2017 இன் இலக்கம் 24 (31 மே 2023) உள்நாட்டு வருவாய்ச் சட்டத்தின் 102வது பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவிப்பின்படி, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டிய நபர்கள் பின் வருமாறு:

(1) w.e.f. 01 ஜுன் 2023 - பின்வரும் நபர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் IRA இன் கீழ் பதிவு செய்ய வேண்டும்

தொழில்முறையில் ஈடுபடுபவர்கள்

- இலங்கை மருத்துவச் சபையில் (SLMC) பதிவு செய்த வைத்தியர்கள்
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICASL) உறுப்பினர்கள்
- இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CMA) உறுப்பினர்கள்
- இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் (IESL) உறுப்பினர்கள்
- இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் (APBSL) உறுப்பினர்கள்
- இலங்கைக் கட்டடக் கலைஞர்கள் சங்கத்தின் (SLIA) உறுப்பினர்கள்
- இலங்கையின் அளவு ஆய்வாளர்கள் நிறுவனத்தின் (IQSSL) உறுப்பினர்கள்
- இலங்கை உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் / உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள்

வணிக நபர் - தமது தொழில்களை/வணிகங்களைப் பிரதேச செயலகங்களில் பதிவு செய்தவர்கள்.

வாகன உரிமையாளர்கள் - மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை வைத்திருக்கும் நபர்கள் (முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கை உழவு இயந்திரங்கள் என்பனவற்றிக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது).

சொத்து உரிமையாளர்கள் - 01 ஏப்ரல் 2018க்குப் பின் பத்திரப் பரிமாற்றத்தின் மூலம் இலங்கையில் அசையாச் சொத்தை வாங்கிய / உரிமையாளராகிய நபர். அல்லது உள்ளூர் அதிகாரசபையிடமிருந்து கட்டிடத் திட்டத்திற்கான அனுமதியைப் பெறும் தனிநபர்.

சேமநல நிதி / வருங்கால வைப்பு நிதி (PF) பங்களிப்பாளர் - ஊழியர் மற்றும் முதலாளி இருவரிடமிருந்தும் எந்தவொரு ஊழியர் சேமநல நிதி அல்லது ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கு (PF) மாதாந்த பங்களிப்பு LKR 20,000ஐ விட அதிகமாக இருக்கும் பணியாளர்.

வரி நிவாரணத் தொகைக்கு மேலதிகமாக வருமானம் பெறுபவர்கள் - இலங்கையில் ஏதேனும் சேவைகளை வழங்குவதற்காக மாதாந்தம் LKR 100,000 அல்லது 12 மாதக் காலத்திற்கு LKR 1,200,000 கட்டணமாகப் பெற்றுக்கொள்ளும் தனி நபர்.

(2) w.e.f. 01 ஜனவரி 2024 - 18 ஆண்டுகள் THRESHOLD

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இறைவரித் திணைக்களத்தில் கோப்பு ஒன்றைத் திறப்பது கட்டாயம் ஆகும்.

- 2023 டிசம்பர் 31ஆம் திகதி 18 வயதை நிறைவு செய்தவர்கள்

அல்லது

- 2024 ஜனவரி 1ஆம் திகதி அல்லது அதற்குப் பிறகு 18 வயதை அடையும் அனைத்து நபர்களும்

இவர்கள் இந்தப் புதிய விதிக்கு உட்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வருமான வரிக் கோப்பினைத் திறக்கும்போது மேலே குறிப்பிட்டுள்ள நபரின் கடமை என்னவாக இருக்கும்?

1. வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN): இலங்கையில் உள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் (IRD) TINஐப் பெறுவதே முதல் படியாகும். தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து IRDக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது நேரடியாக online மூலம் அந்த நபர் TINக்கு விண்ணப்பிக்கலாம். TIN என்பது வரி நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனித்துவமான அடையாள எண்.

2. விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்: நபர் ஒருவர் TINஐப் பெற்றவுடன் வரி வகைப் பதிவிற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்நாட்டு இறைவரித்திணைக் களத்திலிருந்து பெறலாம், அவர்களின் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். அல்லது நேரடியாக online மூலம் படிவத்தைத் துல்லியமாகப் பூர்த்தி செய்து தேவையான ஆதார ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

3. துணை ஆவணங்கள்: புதிய வருமான வரிக்கோப்பைத் திறக்கப் பொதுவாகத் தேவைப்படும் துணை ஆவணங்கள்

- அடையாள ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள். (தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு போன்றவை)
- குடியிருப்பு முகவரிக்கான சான்று. (பயன்பாட்டுப் பற்றுச்சீட்டுகள் / வாடகை ஒப்பந்தம் போன்றவை)
- வேலைவாய்ப்பு விவரங்கள். (வேலைவாய்ப்பு ஒப்பந்தம் / தொழில்தருநரின் கடிதம் போன்றவை)
- வருமானத்தை உறுதிப்படுத்த வங்கி அறிக்கைகள் / பிற நிதி ஆவணங்கள்.

4. சரிபார்ப்பு மற்றும் செயலாக்கம்: விண்ணப்பம் மற்றும் ஆதார ஆவணங்களைச் சமர்ப்பித்தப் பிறகு வழங்கப்பட்டத் தகவல்களைச் சரிபார்க்கும் தேவை ஏற்படின், IRD கூடுதல் ஆவணங்கள்/ விளக்கங்களைக் கோரலாம். சரிபார்ப்புச் செயல்முறை முடிந்ததும் உங்களுக்கான புதிய வருமான வரிக் கோப்பு திறக்கப்படும்.




வரி விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் காலப்போக்கில் மாறக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இலங்கையில் உள்ள தனிநபர்களுக்கான புதிய வருமான வரிக் கோப்பினைத் திறப்பது தொடர்பான மிகவும் புதுப்பித்த மற்றும் துல்லியமான தகவல்களுக்கு, இலங்கையின் உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது வரி நிபுணரிடம் ஆலோசனை பெறவும் பரிந்துரைக்கிறேன்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com




# நஞ்சில்லா நல்லுணவு என்பதே எங்களுடைய தாரக மந்திரம்

“ உங்களுடைய கால்களுக்கு அடியிலேயே இருக்கின்ற மூலிகைகளை நீங்கள் இனம் காணப் பழக வேண்டும். அவைகளை உணவோடு சேர்ப்பதன் மூலம் நீங்கள் குறைந்த செலவினத்தில் நிறைந்த சக்திகளைப் பெற்றுக் கொள்கிறீர்கள். இதனால் உங்களை அறியாமலேயே உங்களது குடும்பத்திற்கான சேமிப்பு அதிகரிக்கின்றது ”



# ஆரண்யா பசுமைக் குடில் ஆரண்யா அல்லி

நேர்கண்டவர் - ஞா.கவினி




ஆரண்யா பசுமைக் குடில் மூலம் நமது மரபையும் தொன்மைகளையும் பாதுகாப்பதோடு ஏனையோர்களுக்கும் கடத்திச் செல்லும் ஆரண்யா அல்லி.

இவர், இந்தியாவில் பட்டிதொட்டி எங்கும் கிடைக்கும் இயற்கை மூலிகைகளை பெறுமதி சேர்த்துப் பல்வேறுபட்ட உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு சந்தைப்படுத்தி வரும் தொழிலதிபர் மட்டுமன்றி ஒரு மிகச்சிறந்த இயற்கையின் தோழியும்கூட... இலங்கையில் பல்வேறுபட்ட தொழில் முனைவோர்களை ஒன்றிணைத்து உயிர்ப்பூ நிறுவனம் ஒழுங்குபடுத்திய இணைய வழிப் பயிற்சிகளில் பலருக்கு பல்வேறுபட்ட உற்பத்திகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டியாக இருந்தவர்.


## தொழில் ஆரம்பம்

மறக்கப்பட்டுக் கொண்டு போகும் நமது மரபுகளையும், தொன்மைகளையும் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

“நஞ்சற்ற நல் உணவு” என்ற தொனிப்பொருளுக்கு அமைய நமது முன்னோர்கள் சொன்ன வாழ்க்கை முறைகளை உணவோடு சேர்த்து உங்களுக்கு அளிப்பதில் ஆரண்யா பசுமைக் குடில் பெருமை அடைகின்றது. ஆரண்யா பசுமை குடில் கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன் தனது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு சிறிய தையல்கூடமாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது அனேகம் பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் மிகச்சிறந்த இயற்கை உற்பத்திகளுக்கான தளமாக அமைந்திருக்கின்றது. இந்தியாவின் மூலை முடுக்கெங்கம் கிடைக்கும் மூலிகைகளை தரம் பிரித்து ஆராய்ந்து அவைகளுக்கு பெறுமதி சேர்த்து உலர் உணவுகளாகவும் சூப் வகைகளாகவும் மாத்திரமன்றி சவர்க்காரங்கள், தலை முடிகள் வளர்வதற்கான எண்ணெய் வகைகள் என்று பலதரப்பட்ட உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றது. ஆரண்யா பசுமை குடிலின் நிறுவுனர் அல்லி மிகச் சிறந்த மூலிகை பாரம்பரியத்தில் வளர்ந்து அதில் கைதேர்ந்தவர் என்பதால் இவருடைய உற்பத்திகள் உலகத்தரம் வாய்ந்தவையாக இருப்பதோடு பல்வேறு நாடுகளிலும் பலரால் விரும்பி உபயோகப்படுத்தப்படுகின்ற பொருட்களாகவும் இருக்கின்றன.

## சவால்களும்சாதனைகளும்

ஆரம்பத்தில் மிகச் சிறிய அளவில் இந்த உற்பத்திகளை மேற்கொள்ளும்போது “என்ன நம்பிக்கையில் இதைச் செய்கிறோம்” என்ற கேள்வி எப்போதும்







எனக்கு இருந்து கொண்டே இருந்தது. இதனை எப்படி சந்தை படுத்தப் போகிறோம்? மக்கள் இதனை விரும்பிப் பயன்படுத்துவார்களா? என்றெல்லாம் குழப்பமாக இருந்தது. எங்களது தோட்டத்தில் விளைந்த மஞ்சள் போன்ற மூலிகைகளை மிகச் சிறிய அளவில் பொடியாக்கி விற்பனை செய்யத் தொடங்கியபோது வாடிக்கையாளர்களிடமிருந்து அதற்கான கேள்வி வரத் தொடங்கியது. இன்னும் சுத்தமான தேங்காய் எண்ணெயை உணவிற்காக வாடிக்கையாளர்களுக்கு கொடுக்க முற்பட்ட போது தான், உங்களுக்குத் தெரிந்த மூலிகைகளை சேர்த்துத் தலைமுடி வளர்வதற்கான மூலிகையை தயாரித்துத் தர முடியுமா? என்று எனக்கான சந்தை வாய்ப்பை எனது வாடிக்கையாளர்களே ஏற்படுத்தி தந்தார்கள். தற்போது எனது நாட்டிற்குள் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் பரவலாக ஆரண்யா பசுமைக் குடில் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுவது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

சவால்களை தாண்டிய வெற்றி என்று சொல்லப்போனால் நமது முன்னோர்கள் எனக்கு அறிமுகப்படுத்திய மூலிகைகளை நான் இன்னும் பலருக்கு உணவாக கொடுக்கிறேன் என்பதோடு, பலருடைய நோய்களை இந்த உணவுகள் குணப்படுத்தி இருக்கின்றன. பல வாடிக்கையாளர்களது மருத்துவச் செலவைக் குறைத்து இருக்கிறேன் என்பதும் எனக்கு மகிழ்ச்சியை தரக்கூடிய விடயம்.. "நஞ்சில்லா நல்லுணவு" இதுதான் எங்கள் ஆரண்யா பசுமை குடிலின் தாரக மந்திரம். நஞ்சு இல்லாத உணவுகளை உட்கொண்டு வந்தால் காலப்போக்கில் பல நோய்கள் நம்மை விட்டுத் தாமாகவே ஓடிவிடும். அத்தோடு வரும் கெட்ட வைரஸ்களை எதிர்த்து நிற்கக்கூடிய பலத்தையும் இந்த மூலிகை சார் உணவுகள் நமக்கு வழங்குகின்றது என்பது அத்தனை பெரிய உண்மை.

### கனவுகள்

இந்த மூலிகைகளைப் பற்றி எப்போதும் எனக்கு புதிய புதிய கனவுகள் இருக்கின்றன.

எங்களுடைய மரபுசார்ந்த மூலிகை உணவுகளைப் பற்றி இன்னும் பலருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பது எனது விருப்பம். ஒரு மனிதன் முழு ஆரோக்கியமாக வாழ்வதற்கான அத்தனை நலன்களையும் பொக்கிஷமாக வைத்திருக்கிறது இந்த மூலிகைகள். இந்த மூலிகைகளைப் பற்றியும் உற்பத்திகளை பற்றியும் இணைய வழி மூலமும் நேரடியாகவும் பலருக்கு பயிற்றுவித்து வருகிறேன்.

இலங்கையில் உள்ள சுய தொழில் முயற்சியாளர்களுக்கு உயிர்ப்பு நிறுவனத்தின் மூலம் இணைய வழி இதனை










பயிற்றுவிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வகையில் மிகவும் ஆர்வமாக இச் செயற்பாட்டை முன்னெடுத்த உயிர்ப்புவின் நிறுவுநர் நிஷாந்தி பிரபாகரன் மற்றும் அவர்தம் குழுவினருக்கும் என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். சமூகத்தின் பால் இவர்கள் கொண்டிருக்கும் அக்கறை என்னைப் பெரிதும் கவர்ந்தது.. இலங்கையில் உள்ள பெண்கள் மிக ஆர்வமாக இந்த கற்கை நெறியில் பங்கேற்றனர். பங்கேற்றதோடு மாத்திரமன்றி அவர்கள் உற்பத்திகளைச் செயல்படுத்தி வருகின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இப்படி இன்னும் பலருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆவலாக உள்ளேன்.

என்னைப் போன்ற சகோதர சகோதரிகளுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் உங்களுடைய கால்களுக்கு அடியிலேயே இருக்கின்ற மூலிகைகளை நீங்கள் இனம் காண பழக வேண்டும். அவைகளை உணவோடு சேர்ப்பதன் மூலம் நீங்கள் குறைந்த செலவினத்தில் நிறைந்த சக்திகளைப் பெற்றுக் கொள்கிறீர்கள். இதனால் உங்களை அறியாமலேயே உங்களது குடும்பத்திற்கான சேமிப்பு அதிகரிக்கின்றது. மூலிகைகள் என்பது இயற்கை நமக்கு தந்த வரம் அதனை மூலதனமாகப் பயன்படுத்துபவர்கள் நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். முயற்சியோடு உங்கள் முதல் அடியினை எடுத்து வையுங்கள் இயற்கையும் உங்கள் தன்னம்பிக்கையும் உங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்கிறார் இந்தியாவிலுள்ள ஆரண்யா பசுமைக் குடிலின் நிறுவுனர் அல்லி அம்மா.



# எங்கள் வாழ்வும் வளமும்

# காலம் கலிகாலம்



- தமிழ்க்கவி -

ஒரு மனிதன் இரவுக்குத் தேவையானவற்றை பகலிலும் மாரிகாலத்துக்கு தேவையானவற்றை கோடையிலும் முதுமைக்கு தேவையானவற்றை இளமையிலும் மறுமைக்கு தேவையானவற்றை இம்மையிலும் தேடிக்கொள்ள வேண்டும்.”

இது எமது சித்தர்களின் வாக்கு. இதுவும் அவர்களது அனுபவங்கள் என்பதை விட அவதானிப்பு என்றே கூறலாம். தேனீக்கள் தாம் நிலவுகாலங்களில் சேகரிப்பதை இருட்டுக்காலங்களில் அதாவது தேய்பிறைக் காலங்களில் அருந்தி முடிக்கின்றன. கறையான்கள் மாரிகாலம் வருமுன்பே தமது முட்டைகளைப் புற்றுகளை உயர்த்திக்கட்டி அங்கே கொண்டு போய் ஒழித்து வைப்பதால் அவை பாதுகாக்கப்படுகின்றன.

எறும்புகளும் தமக்குத் தேவையான உணவையும் தமது சந்ததியையும் திட்டைகளிலும் நீர்புகா இடங்களிலும் சேகரித்து வைக்கின்றன. மனிதர்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையற்ற எல்லாவற்றையும் பாதுகாப்பாக வைக்கிறார்களா? எது தனக்கு எப்போது தேவைப்படுமோ அதை அவன் சேகரிப்பதில்லை. வேறெந்த சீவராசிகளும் செய்யாத ஒன்றை அவன் செய்கிறான். அதுதான் கடன் வாங்கி தனது ஆசைகளைப் பூர்த்தி செய்தல்.

முற்காலத்தில் என் தந்தை சொல்வார். ஒருவன் கடன் வாங்குகிறான் என்றால் அவனுக்கு எதிர்பாராமல் வரும் இழப்பு அதாவது நோய் மரணம் போன்ற நிகழ்வு நடந்தால் அல்லது திருமணம், விபத்துகள் என்பன நேரிட்டால் அவன் தவிர்க்க முடியாமல் கடன் வாங்க நேரிடும். அதையும் அவனால் கட்ட முடியாது என்பதை ஊர்ப் பெரியவர்கள் கூடி முடிவெடுத்தால் அந்த நிகழ்ச்சி நடைபெறும் பொழுதே அனைத்து




கிராமத்தவர்களும் தம்மால் இயன்ற தொகையை வழங்கி அந்தச் செலவை முடித்து வைப்பார்கள். எனக்குத் தெரிய எனது கிராமத்தில் ஒருவர் தற்காப்புக்காக ஒரு கொலையைச் செய்து சிறைக்குச் சென்று விட்டார். அவரது குடும்பம் சின்னஞ் சிறு குழந்தைகளையும் மனைவியையும் அவரது தாயாரையும் கொண்டது. மிகவும் கஷ்டப்பட்டார்கள். வழக்காடியதில் அவரது வயல்நிலமும் விற்றாகிவிட்டது. ‘பணச் சடங்கு’ ஒரு நிகழ்ச்சியைச் செய்து ஊரவர்களை அழைத்து ஒரு வேளை சாப்பாடு போட்டுப் பணம் சேர்த்தார்கள். மறுபடி அவர்களுடைய வாழ்க்கை பழையபடி நன்றாக அமைந்தது.

இதேபோல ஒரு குடும்பத்தலைவர் எதிர்பாராமல் திடீரென மாரடைப்பால் இறந்து போனார். அவர் இறந்த அன்றைக்கு அந்தக் குடும்பத்திற்கு சாப்பாடு கூட இல்லை. ஆனால் அந்த மரணச்சடங்கு சிறப்பாக நடந்து. அந்தக் குடும்பமும் ஒரு நல்ல நிலைக்கு வர கிராம மக்களே உதவினார்கள். இதில் ஏழை பணக்காரன் வித்தியாசம் இல்லை. அனைவரும் தம்மால் இயன்ற பங்கை மகிழ்ச்சியோடு செலுத்தி அவர்களும் மகிழ்ந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். இன்றைக்குள்ள மக்களின் மனநிலை பற்றிப் பேசவே முடியவில்லை.

தாய் கடுமையான நோயில் அவதிப்படுகிறாள். மகன் கடன் கேட்டு ஒருவரை நாடுகிறான். அவரோ அவனிடம் 'அடைவாக எதைத்தருவாய்' என்று கேட்கிறார். அவன் தனது ஜீவாதாரமாக வைத்திருந்த உழவு மாடுகளை அவருக்குக் கொடுத்து விட்டு பணம் பெறுகிறான். அடுத்த நாள் அவனது முயற்சி பலனளிக்காமல் அந்தத் தாய் இறந்து போனாள். ஆனால் அவனிடம் மாடு விற்ற பணம் இருந்ததால் அதில் மரணச் சடங்கைச் செய்தான்.

பொதுவாகக் கிராமமக்களிடம் அதுவும் பெண்களிடம் சேமிப்பு என்கிற பழக்கம் ஆன்மாவிலேயே ஒட்டியிருக்கும். ஒரு சில பெண்கள் விதிவிலக்கு என்பதையும் சொல்லிவிடுகிறேன். இந்தச் சேமிப்புக்கு 'சிறுவாடு' என்று பெயர். 'என் தாயின் சேலைத் தலைப்பில் ஒரு ஐம்பது சதமாவது இல்லையென்றால் மத்திய வங்கியில் காசில்லை என்றுதான் அர்த்தம்' என்று என் தம்பி சொல்வான். அது சத்தியமான வார்த்தைதான். இந்தச் சிறுவாடுகள் சீட்டுக்காளாக மாறும். அவ்வப்போது வரும் பெரும் செலவுகளுக்கு அது பேருதவியாகவும் மாறும். எனவே இதை அறிந்தாலும் என் தந்தை அதில் தலையிடமாட்டார். வீட்டில் உணவுத் தேவைக்காக நாலைந்து கோழிகள் நிற்கும். அதில் எமது தேவை போக மீதமான முட்டைகள். மரத்திலிருந்து உதிரும் எலுமிச்சம் பழங்கள். வீட்டுத் தேவைக்காக என் தோட்டத்தில் ஆய்ந்து வரும் மேலதிக மரக்கறிகள் என்பவை அயல் வீடுகளுக்கு விற்பனை செய்வதில் வரும் சேமிப்பே இதுவாகும். அம்மா சும்மா இல்லை என்பது எங்களுக்கு தெரியுமா? யாராவது "அம்மா என்ன செய்யிறா" என்று கேட்டால் சற்றும் தயங்காமல் அம்மா வீட்டில சும்மா இருக்கிறதாகச் சொல்வோம். கோவில் திருவிழாக்களுக்கு செல்லும் போது அம்மா எங்களுக்கு ஆளுக்கொரு உண்டியல் வாங்கித்தருவாள். அதை யார் முதலில் நிரப்புவது என்பதில் நாங்கள் போட்டி போடுவோம். கடைக்குப் போகச் சொல்லும் போதெல்லாம் எனக்கு ஐந்து சதம் கூலியாகக் கேட்பேன்.

இப்போதுள்ள பெண்களின் சேமிப்புகள் பற்றி கேட்டுப்பாருங்கள். போர் நடந்த காலத்தில் சுய சேமிப்புக்குழுக்களாக இணைந்த பெண்கள் கிடுகு பின்னியும் தையல் செய்தும் ஓலை மட்டை போன்றவற்றை விற்றும் மத்தியானச் சமையல் முடிந்தபின் தேங்காய் துருவி அதை தேங்காய் எண்ணெயாக மாற்றியும் தும்புகளை வீணாக்காமல் அவற்றில் கயறு திரித்தும் சக்திக்கேற்ப வேலை செய்து சம்பாதித்ததை நானறிவேன். இந்தச் சேமிப் புகளுக்கூடாக அவர்களுக்கு பரிசுத் திட்டங் களும் இருந்தன.

நீண்ட நாட்களின் பின் என் பேத்தியிடம் போனேன். அவள் தனது அலுமாரியைத் திறந்து காட்டினாள். அது கண்ணைப்பறிக்கும் வண்ண ஆடைகளால் நிரம்பி இருந்தது. அதைவிட இப்போது புதிய அலுமாரி வாங்கியிருப்பதாக சொன்னாள். 'இவைகளைப் போடவே காலம் போதாதே இன்னும் ஏன்' என்றேன். அவள் சொன்ன பதில் என்னை திகைக்க வைத்தது. "ச்சா உதெல்லாம் போட்ட உடுப்புத்தான் அதை இனி விழாக்களுக்கு போடேலாது. சும்மா எங்கினயும்தான் போடலாம்' என்றவள் தொடர்ந்து அம்மம்மா காசிருந்தா ஒரு முப்பதாயிரம் தாங்க வாறமாசம் திருப்பித் தாறன்." என்றாள். "ஏன்?" "தெரிஞ்ச பிள்ளையின்ர பேர்த்டே வருது அதுக்குத் தான்." என்றாள். கொடுக்கலாமா?



பொதுவாகக் கிராம மக்களிடம் அதுவும் பெண்களிடம் சேமிப்பு என்கிற பழக்கம் ஆன்மாவிலேயே ஒட்டியிருக்கும். ஒரு சில பெண்கள் விதிவிலக்கு. இந்தச் சேமிப்புக்கு 'சிறுவாடு' என்று பெயர். 'என் தாயின் சேலைத் தலைப்பில் ஒரு ஐம்பது சதமாவது இல்லையென்றால் மத்திய வங்கியில் காசில்லை என்றுதான் அர்த்தம்' - என்று என் தம்பி சொல்வான். அது

இரண்டே பேர் வசிக்கும் ஒரு வீட்டிற்கு சலவை மெசின் தேவையா? ஒவ்வொரு அறையும் தொலைக்காட்சிப் பெட்டி தேவையா? ஆனால் இருக்கிறது. அவர்களின் வீட்டில் மாதமுடிவில் உணவுச் செலவிற்கே அல்லாடுகிறார்கள் காரணம் மாத ஊதியத்தில் அவர்கள் பட்ட கடனுக்கே கணிசமான தொகை போய்விடுகிறது. அப்படியிருந்தும் பெரும்பாலான நாட்களை ஒன்லைனில் ஓடர் பண்ணித்தான் சாப்பிடுகிறார்கள். எமது மக்களின் வாழ்க்கைமுறை மாறிவிட்டது. சேமிப்பு என்ற சொல்லை அறவே மறந்து வருமானம் என்பதே கடன்தான் என்று ஆகிவிட்டது. அதற்கேற்றாற் போல வங்கிகளும் தனிநபர் கடன் வழங்குவோரும் பகிரங்கமாகவே தாம் வழங்கும் கடன்களைப்பற்றி கவர்ச்சிகரமான விளம்பரங்களைச் செய்கிறார்கள்.

ஒரு சினிமாப்பாடல் வருமே 'வரவு எட்டணா செலவு பத்தணா" என்று அதே நிலைதான் எல்லோருக்கும். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி. மாத்தளையை சுற்றிப்பார்க்க நினைத்து அங்கே சென்றேன். எனது நண்பர் ஒருவர் அழகான வீடு கட்டியிருந்தார். அங்கு தங்கிச் சுற்றுலாவை முடித்துவிட்டு வந்தேன். இன்று அந்த நண்பர் தெருச் சந்தையில் மரக்கறி கூவி விற்றுக் கொண்டிருக்கிறார். வசிப்பதும் ஒரு குடிசை போன்ற வாடகை வீட்டில். வீட்டை ஒரு வங்கியில் அடமானம் வைத்து தனது நண்பருக்கு உதவினாராம். நண்பர் ஏமாற்றிவிட்டார். வீடு ஏலத்தில் போய்விட்டது. கடன் என்ற சொல்லை எமது மக்கள் விட்டொழிக்காதவரை சேமிப்பு என்பதை ஆரம்பிக்காதவரை எதுவும் நடக்காது. மனிதன் எவ்வளவு செல்வம் இருப்பதாக வெளியே காட்டிக் கொண்டாலும் அவன் நடைப்பிணம்தான்



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



"இத்தரவுகளை அடிப்படையாக வைத்தே அரச NLDB பண்ணைகளில் செம்மறி ஆட்டுக்கும் கொட்டாக்காச்சி ஆட்டுக்கும் மட்டுமே முன்னுரிமை கொடுத்து வளர்க்கப்படுகின்றது. இத்தரவுகள் ஆனது வடகிழக்கு கால நிலையை மையப்படுத்தியதாகவே அமைந்திருக்கின்றது."

# எந்த ஆடு வளர்த்தால் அதிக இலாபம் பெறலாம்?

ஆடு வளர்க்க ஆர்வமுள்ளவர் இந்த பதிவினை நுணுக்கமாகவும் கவனமாகவும் வாசித்துப் பாருங்கள்.

நிச்சயம் பிரயோசனமாக இருக்கும்.

தற்பொழுது வளர்ப்பிலுள்ள ஆடுகள் பற்றியும். அவற்றின் நன்மை, தீமை, இலாபம், நட்டம். நிறை, பராமரிப்புச் செலவு அவற்றின் அடிப்படை இயல்புகள் அனைத்தையும் எம்மால் முடிந்தவரை தனித் தனியே தொகுத்து தருகின்றோம்.

நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம் எந்த ஆடு வளர்ப்பில் அதிக இலாபம் உள்ளது என்பதை.

தற்பொழுது இலங்கையில் உள்ள ஆடுகள்.

1. நாட்டு ஆடு (ஊர் ஆடு)
2. ஜமுனாபாரி
3. சானன்
4. செம்மறி
5. கொட்டாக் காட்சி
6. லங்கா போயர்

### 1. நாட்டு ஆடு

- உடல் நிறை :- ஆண்.35kg பெண்.25kg
- உயரம் :- ஆண்.65cm பெண்.60cm
- மார்புச் சுற்றளவு :- ஆண்.70cm பெண்.65cm
- நிறம் :- பல நிறம்
- பருமன் :- சிறிது
- நோக்கம் :- இறைச்சி
- மேய்ச்சல் பராமரிப்பு :- திறந்த முறையில் வளர்க்கலாம். இலை குழைகளை மட்டும் உண்டு வாழக்கூடியது.
- நாள் ஒன்றுக்கான உணவு வீதம்: 3.5 kg
- ஓர் ஆட்டின் ஆண்டு பராமரிப்பு செலவு :- 3350 /-
- நோய் எதிர்ப்புத்திறன் :- 92% (அதிகம்)
- ஆண்டொன்றுக்காண இறப்பு வீதம்:- 8%
- இதை தாக்கும் நோய்கள்
:- ஆட்டு சோர்வு வாதம்
:- தொடுகை கொப்பளத்தோல் அலர்ஜி
:- தோல் நோய்
:- காற்றூதுதல் அல்லது வாய்வூதல்
- ஆயுள்
:- அதிகம்
- ஏற்ற காலநிலை
:-ஓரளவு வெப்பமான காலநிலை ஏற்றது
- கற்பகால நாட்கள் :- 151 நாட்கள்
- ஒரு ஈத்தில் குட்டிகளின் எண்ணிக்கை:- 1 - 3
- ஒன்றுக்கான குட்டியின் வளர்ச்சி :- 1.5 kg

### 2. ஜமுனாபாரி

- உடல் நிறை :- ஆண்.50kg பெண்.40kg
- உயரம் :- ஆண்.85cm பெண்.80cm
- மார்புச் சுற்றளவு :- ஆண்.85cm பெண்.80cm
- நிறம் :- பல நிறம்
- பருமன் :- பெரிது
- நோக்கம் :- இறைச்சி. பால்
- மேய்ச்சல் பராமரிப்பு :-அடைப்பு முறையில் வளர்க்க வேண்டும். (கட்டாயம்) இலை தழைகளை மற்றும் ஆட்டு தீவனத்தினை உணவாக எடுத்துக் கொள்ளும்.
- நாள் ஒன்றுக்கான உணவு வீதம் :- 4.5 kg
- ஓர் ஆட்டின் ஆண்டு பராமரிப்பு செலவு :- 6350/-
- நோய் எதிர்ப்புத்திறன் :- 84% (குறைவு)
- ஆண்டொன்றுக்காண இறப்பு வீதம் :- 16%
- இதைத் தாக்கும் நோய்கள் :- ஆட்டு சோர்வு வாதம்
:- தொடுகை கொப்பளத்தோல் அலர்ஜி
:- தோல் நோய்
:- நியூமோனியா
:- காற்றூதுதல் அல்லது வாய்வூதல்
- ஆயுள் :- குறைவு
- ஏற்ற காலநிலை :-குறைந்த வெப்ப நிலை, குறைந்த குளிர் மட்டுமே ஏற்றது
- கற்பகால நாட்கள் :- 151 நாட்கள்
- ஓர் ஈத்தில் குட்டிகளின் எண்ணிக்கை :- 1 - 2
- மாதம் ஒன்றுக்கான குட்டியின் வளர்ச்சி :- 2.5 kg

### 3. சாணன்

- உடல் நிறை :- ஆண்.50kg பெண்.40kg
- உயரம் :- ஆண்.70cm பெண்.65cm
- மார்புச் சுற்றளவு :- ஆண்.75cm பெண்.70cm
- நிறம் :- வெள்ளை நிறம்
- பருமன் :- நடுத்தரப் பாரமுடையது
- நோக்கம் :- பால்,இறைச்சி
- மேய்ச்சல் பராமரிப்பு :- அடைப்பு முறையில் வளர்க்கவேண்டும் (கட்டாயம்) இலை தழைகளை மற்றும் ஆட்டு தீவனத்தினை உணவாக எடுத்துக் கொள்ளும்.
- நாள் ஒன்றுக்கான உணவு வீதம் :- 5 kg

◆ஓர் ஆட்டின் ஆண்டு பராமரிப்பு செலவு :- 6350 /-
◆நோய் எதிர்ப்புத்திறன் :- 84% (குறைவு)
◆ஆண்டொன்றுக்கான இறப்பு வீதம் :- 16%
◆இதைத் தாக்கும் நோய்கள்
:- ஆட்டு சோர்வு வாதம்
:- தொடுகை கொப்பளத்தோல் அலர்ஜி
:- தோல் நோய்
:- நியூமோனியா
:- காற்றூதுதல் அல்லது வாய்வூதல்
◆ஆயுள் :- குறைவு
◆ஏற்ற காலநிலை :-குறைந்த வெப்ப நிலை. குறைந்த குளிர் மட்டுமே இருக்க வேண்டும்.
◆கற்பகால நாட்கள் :- 151 நாட்கள்
◆ஓர் ஈத்தில் குட்டிகளின் எண்ணிக்கை :- 1 - 3
◆மாதம் ஒன்றுக்கான குட்டியின் வளர்ச்சி :- 2.5 kg

**4. செம்மறி**

◆உடல் நிறை :- ஆண்.50kg பெண்.40kg
◆உயரம் :- ஆண்.75cm பெண்.70cm
◆மார்புச் சுற்றளவு :- ஆண்.80cm பெண்.75cm
◆நிறம் :- பல நிறம்



◆பருமன் :- பெரிது
◆நோக்கம் :- இறைச்சி, உரோமம்
◆மேய்ச்சல் பராமரிப்பு :- திறந்த முறையில் வளர்க்கலாம்.

காய்ந்த இலை, சருகுகள் மற்றும் வைக்கோல் போன்றவற்றைச் சூழலுக்கு ஏற்றாற்போல் உணவாக எடுத்துக் கொள் ளும்.

◆நாள் ஒன்றுக்கான உணவு வீதம் :- 5 kg
◆ஓர் ஆட்டின் ஆண்டு பராமரிப்பு செலவு :- 2500/-
◆நோய் எதிர்ப்புத்திறன் :- 99% ( மிக அதிகம் )
◆ஆண்டொன்றுக்காண இறப்பு வீதம் :- 1%
◆இதைத் தாக்கும் நோய்கள்
:- ஆட்டு சோர் வாதம் மட்டும் (வேறு நோய்த் தாக்கம் இல்லை)
◆ஆயுள் :- அதிகம்
◆ஏற்ற காலநிலை :-அதிக குளிர் அதிக வெப்பம் இரண்டிற்கும் ஏற்றது.
◆கற்பகால நாட்கள் :- 151 நாட்கள்



◆ஓர் ஈத்தில் குட்டிகளின் எண்ணிக்கை :- 1 - 2
◆மாதம் ஒன்றுக்கான குட்டியின் வளர்ச்சி :- 3 kg

**5.கொட்டாகாட்சி**

◆உடல் நிறை :- ஆண்.40kg பெண்.30kg
◆உயரம் :- ஆண்.75cm பெண்.70cm
◆மார்புச் சுற்றளவு :- ஆண்.70cm பெண்.65cm
◆நிறம் :- கறுப்பு
◆பருமன் :- நடுத்தரம்
◆நோக்கம் :- இறைச்சி
◆மேய்ச்சல் பராமரிப்பு :- திறந்த முறையில் வளர்க்கலாம்.
◆நாள் ஒன்றுக்கான உணவு வீதம் :- 4 kg
◆ஓர் ஆட்டின் ஆண்டு பராமரிப்பு செலவு :- 3250/-
◆நோய் எதிர்ப்புத்திறன் :- 94% (அதிகம்)
◆ஆண்டொன்றுக்கான இறப்பு வீதம் :- 6%
◆இதைத் தாக்கும் நோய்கள்
:- ஆட்டுச் சோர்வு வாதம்
:- தொடுகை கொப்பளத்தோல் அலர்ஜி
:- தோல் நோய்
:- காற்றூதுதல் அல்லது வாய்வூதல்
◆ஆயுள் :- மிக அதிகம்
◆ஏற்ற காலநிலை :-ஓரளவு வெப்பநிலை ஏற்றது
◆கர்ப்பகால நாட்கள் :- 151 நாட்கள்
◆ஓர் ஈத்தில் குட்டிகளின் எண்ணிக்கை :- 1 - 2
◆மாதம் ஒன்றுக்கான குட்டியின் வளர்ச்சி :- 2.5 kg

**6.லங்காபோயர்**

◆உடல் நிறை :- ஆண்.70kg பெண்.50kg
◆உயரம் :- ஆண்.60cm பெண்.55cm
◆மார்புச் சுற்றளவு :- ஆண்.90cm பெண்.80cm
◆நிறம் :- வெள்ளை, கறுப்பு, மண்ணி றம் (கழுத்திற்குமேல்)
◆பருமன் :- சிறிது (பாரம் கூடியது)
◆நோக்கம் :- இறைச்சி
◆மேய்ச்சல் பராமரிப்பு :- அடைப்பு முறையில் வளர்க்க வேண்டும். (கட்டாயம்)
◆நாள் ஒன்றுக்கான உணவு வீதம் :- 6 kg
◆ஒரு ஆட்டின் ஆண்டு பராமரிப்பு செலவு :- 8000/-
◆நோய் எதிர்ப்புத்திறன் :- 86% (குறைவு)
◆ஆண்டொன்றுக்காண இறப்பு வீதம் :- 14%
◆இதைத் தாக்கும் நோய்கள்
:- ஆட்டு சோர்வு வாதம்
:- தொடுகை கொப்பளத்தோல் அலர்ஜி
:- தோல் நோய்
:- நியூமோனியா
:- காற்றூதுதல் அல்லது வாய்வூதல்
◆ஆயுள் :- குறைவு
◆ஏற்ற காலநிலை :-குறைந்த குளிர் குறைந்த வெப்பநிலை மட்டுமே ஏற்றது.
◆மாதம் ஒன்றுக்கான குட்டியின் வளர்ச்சி :- 4 kg

எமது அனுபவத்தில்
1ஆவது இடத்தில் செம்மறி ஆடும்
2ஆவது இடத்தில் கொட்டகாட்சி ஆடும்
3ஆவது இடத்தில் நாட்டு ஆடும்
4ஆவது இடத்தில் லங்கா போயர் ஆடும்
5ஆவது இடத்தில் ஜமுனாபாரி ஆடும்
6ஆவது இடத்தில் சாணன் ஆடும் உள்ளன.

இத்தரவுகளை அடிப்படையாக வைத்தே அரச NLDB பண்ணைகளில் செம்மறி ஆட்டுக்கும் கொட்டாக்காச்சி ஆட்டுக்கும் மட்டுமே முன்னுரிமை கொடுத்து வளர்க் கப்படுகின்றது

இத்தரவுகள் ஆனவை வடகிழக்கு காலநிலையை மையப்படுத்தியவையாகவே அமைந்திருக்கின்றன.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும். Ph: 0770239784



# பிரித்தானிய மூத்த பிரஜைகளின் 'ரவணா சீக்ரெட்' சுற்றுலா மையம்

- கனிமொழி -

இலங்கை இயற்கைக் கொடைகள் நிறைந்தபூமி. அவை நாட்டின் தேசிய வருமானத்தில் பாரிய பங்களிப்பைச் செலுத்துகின்றன. குறிப்பாக, கொரோனா தொற்று, மக்கள் எழுச்சி என்பனவற்றுக்குப் பின்னர் நாட்டின் மீண்டெழு பொருளாதாரத்தில் அதீத செல்வாக்கினைச் செலுத்துவது சுற்றுலாத்துறையே.

2023 இன் முதல் காலாண்டில் மதிப்பிடப்பட்ட சுற்றுலாத்துறை வருவாய் 529.8 மில்லியன் டொலர்களாக இருந்தது. இது ஒரு வருடத்திற்கு முன்பு 482.4 மில்லியன் டொலர்களாக இருந்தது. இந்த மாற்றமானது சுற்றுலாத்துறை மீண்டும் புத்துயிர் பெற ஆரம்பித்துவிட்டது என்பதன் வெளிப்பாடாகும்.

அதுமட்டுமன்றி, கடந்த ஆண்டு ஜனவரியில் வருகை தந்த மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 82,327ஆக இருப்பதோடு அது இந்த ஆண்டில் 102, 545ஆக அதிகரித்துள்ளது. அதேபோன்று பெப்ரவரி 96,507ஆக இருந்த எண்ணிக்கை 107,639ஆக அதிகரித்துள்ளது. மார்ச்சில் 106,500ஆக இருந்த எண்ணிக்கை 125,495ஆக உயர்வடைந்துள்ளது. ஏப்ரலில் 62,980ஆக இருந்த எண்ணிக்கை 105,498ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறான நிலைமாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் உள்நாட்டில் காணப்படுகின்ற சுற்றுலா மையங்கள், தமது வாடிக்கையாளர்களைக் கவருவதற்காகப் பல்வேறு உத்திகளைக் கையாள்வது வழக்கம். குறிப்பாக, மாறுபட்ட வடிவமைப்பு, உணவு வகைகள், என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்லும்.

ஆனால், பண்டாரவளை நகரத்திலிருந்து சுமார் 12கிலோமீற்றர் தொலைவில் உள்ள அம்பத்தகமப் பகுதியில் பேர்ள் பாங் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான சுற்றுலா மையமொன்று காணப்படுகின்றது.

இது 'இயற்கை சுற்றுலாத்துறை' என்ற தொனிப்பொருளின் கீழாக உருவாக்கப்பட்டதாகும். இதன் உரிமையாளர்கள் ஜோன் பொய்ஸ் மற்றும் ஆன் தம்பதியர்.

இவர்கள் பிரித்தானியப் பிரஜைகள். இவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னதாக இலங்கையில் தமது ஓய்வுகாலப்பகுதியை கழிப்பதற்கான சுற்றுலா மேற்கொண்டு வருகை தந்திருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் இவர்களுக்கு, எழில் கொஞ்சும் இலங்கையில் மலையகப் பகுதியில் தங்கிவிட்டால் என்ன? என்ற சிந்தனை ஏற்பட்டது. அந்தச் சிந்தனையின் வெளிப்பாட்டாலேயே அம்பந்தகம பகுதியில் தேயிலை பயிரிடப்பட்ட இந்தப் பகுதியை உரிய பெறுமதியை அளித்து பெற்றுக்கொண்




**“ உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில் உள்நாட்டில் காணப்படுகின்ற சுற்றுலா மையங்கள், தமது வாடிக்கையாளர்களை கவருவதற்காக பல்வேறு உத்திகளைக் கையாள்வது வழக்கம். மாறுபட்ட வடிவமைப்பு, உணவுவகைகள், என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். ஆனால் - பண்டாரவளையில் உள்ள இந்த சுற்றுலா மையம் முற்றிலும் வித்தியாசமானது. ”**



டார்கள்.

120ஏக்கர்கள் பரப்பளவு கொண்ட இப்பகுதியில் ஆரம்பத்தில் தேயிலைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டார்கள். ஆனால் அவர்களால் அதில் வெற்றிபெற முடிந்திருக்கவில்லை. அதன் பின்னர், தம்மைப்போன்று உள்ளவர்கள் தமது சுற்றுலாக்காலத்தில் மிகவும் அமைதியாகவும், ஓய்வாகவும், இயற்கையுடன் ஒன்றித்து நாட்களைக் கழிக்கும் வகையில் ஏற்பாடொன்றை செய்தால் என்ன என்ற எண்ணப்பாடு அவர்களுக்கு ஏற்பட்டது.

அதன் வெளிப்பாட்டால், தமக்குச் சொந்தமான நிலப்பரப்பாக இருந்தாலும் அங்கு சோலையாக உள்ள மரங்களுக்கோ, அரிய வகைத் தாவரங்களுக்கோ, உள்ளூர் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கோ





எந்தவிதமான பாதிப்புக்களுமின்றி தனித் தனியாக விடுதிகளை அமைத்துக்கொண் டார்கள்.

அதில் முக்கியமானது, 'ஹாட் லொட்ஜ்'. இது இதயவடிவிலானது. ஒருங்கே உண வகத்தையும் கொண்டது. அதன் வெளிவா யிலின் அமர்ந்திருந்து 'எல்ல' மலையை யும், அதன் அடிவாரத்தையும் இரசிக்க வல்ல தாக உள்ளது.

மற்றையது, 'கிளப்லொட்ஜ். இது சிறிய தாக இருந்தாலும், வட்டவடிவில் சிறந்த இயற்கை இரசனைக்குரியதாக மரச்சோலை யின் நடுவில் உள்ளது. இதனைவிடவும், பிரதான கட்டடத்தில் பொது அறைகள் காணப்படுகின்றன. அதனைவிடவும் கேட்போர் கூடம் மற்றும் அறைகள் பிரத் தியேகமாகக் காணப்படுகின்றன.

அதனைவிடவும், இங்குள்ள எந்த அறையிலும், தொலைக்காட்சியோ இதர கேளிக்கை உபகரணங்களோ இல்லை. புராதன காலத்துக் கட்டில்கள், அலுமாரிகள், இருக்கைகள் காணப்படுகின்றன. அனைத் துப் பாகங்களிலும் உள்ள யன்னல்கள் ஊடாக மலையடிவாரத்தையோ, மலை உச்சியையோ, மரச்சோலையையோ, விலங்கினங்களையோ என்று தேவை யான இயற்கையைக் காட்சிகளை இரசிக் கலாம்.

இதனைவிடவும், குறித்த விடுதிகளிலி ருந்து பின்பக்கமாகச் செல்கின்றபோது, வனங்களுக்குள்ளான நடைப்பயணம் போன்றதொரு அனுபவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். அதுமட்டமன்றி, அந்த நடைப்பயணத்தினை முடிக்கின்றபோது அழகிய நீர்வீழ்ச்சியொன்றைக் காண முடி யும்.

அபே ரவணா என்று பெயரிடப்பட்டுள்ள அந்த நீர்வீழ்ச்சி தற்போது வரையில் இலை மறை காயாகத்தான் உள்ளது. முறையான பாதுகாப்பு நிலைமைகள் ஏற்படுத்தப்பட வில்லை. அங்கு விஜயம் செய்வதற்கு உரிய பாதைகள் கூடக் கிடையா.

ஆனாலும், நடைப்பயணத்தின் இறுதி யில் அந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் செல் லக்கூடியதொரு நிலைமை காணப்படுவது மனதுக்கு மிகவும் இரம்மியமானதாக இருக்கின்றது.

இதனைவிடவும், குறித்த சுற்றுலா மையத்தில் இயற்கை நீச்சல் தடாகம் அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி, உள்ளூர் உணவுகளை உருசியாகச் சுவைப்பதற்கு சந்தர்ப்பமும் உள்ளது.

ஜோன் பொய்ஸ் மற்றும் ஆன் தம் பதியரைப் பொறுத்தவரையில் அவர்கள் இலாபநோக்கத்துடன் இந்த மையத்தினை முன்னெடுக்கவில்லை. அங்கு பணியாற் றுபவர்களுக்கான கொடுப்பனவைக் கொடுப் பதற்கான வருமானமும், அங்குள்ள இயற் கையைப் பாதுகாப்பதற்குரிய செலவீனத் தினையும் ஈட்டிக்கொண்டால் போது மானது என்பதுதான் அவர்களது நிலைப் பாடு.

இதனால் அவர்களைப் பொறுத்தவரை யில் அதிகாரித்த எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளின் பிரசன்னம் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண் டிருக்கவில்லை. மாறாக இயற்கைப் பிரியர் கள் தமது ஓய்வுநேரத்தினை முழுமையாக



இயற்கையுடன் அமைதியாகக் கழிக்க வேண்டும் என்பதே அவர்களின் இலக்காக உள்ளது.

அத்துடன் அங்கு விஜயம் செய்யும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணியிடத்திலும் மரநடுகைத் திட்டத்தினை முன்னெடுப்ப தற்காக நன்கொடைகளை பெற்றுக்கொள் கின்றார்கள். அதன் மூலம் தமக்குச் சொந்த மாகவுள்ள எஞ்சிய நிலப்பரப்பெங்கும் மர நடுகை செய்கின்றார்கள்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னதாக வருகை தந்தபோது 'எல்ல' பகுதி ஒரு சில விடுதிகளுடன் தான் இருந்தது. ஆனால் தற்போது விடுதிகளின் எண்ணிக்கையை கணக்கிட முடியாத சூழல் ஏற்பட்டு விட்டது. அவ்விதமான நிலைமையொன்று தமது பகுதிக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற கரிசனை ஜோன் பொய்ஸ் மற்றும் ஆன் தம்பதியருக்கு வெகுவாகவே உள்ளது.

சுற்றுலாத்துறை வருமானத்தை வாரிக் கொடுக்கும் என்பதால் முட்டுச்சந்திலும் ஏதாவது செய்துவிடலாம் என்று எண்ணும் உள்நாட்டவர்களுக்கு ஜோன் பொய்ஸ் மற்றும் ஆன் தம்பதியர் இலங்கையின் இயற்கைக் கொடைகளுக்கு முக்கித்து வம் அளித்து முன்னெடுக்கும் சுற்றுலா மையம் ஒரு மிகச் சிறந்த முன்னுதாரணம் தான்.

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
11.06.2023



# கால்நடை வளர்ப்பில் போலி மருத்துவர்கள்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

கால்நடை வளர்ப்பில் போலி மருத்துவர்கள் கணிசமான தாக்கத்தைச் செலுத்துகிறார்கள். ஒரு சில கால்நடைகளின் மிகச் சிறிய நோய் நிலைகளை அவர்கள் குறைக்கின்றபோதும் பல கால்நடைகளின் உயிரிழப்புக்கும் நீண்டகால பாதிப்புக்கும் அவர்கள் காரணமாக அமைகிறார்கள். பல பண்ணைகள் அவர்களின் பொருத்தமற்ற ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் காரணமாக மூடப்பட்டுள்ளன.

போலி கால்நடை சிகிச்சையாளர்களின் உருவாக்கத்துக்கு பல கால்நடை வைத்தியர்கள் தான் முக்கிய காரண கர்த்தாக்கள் எனலாம். இதை ஒரு கால்நடை வைத்தியராக நான் ஒப்புக் கொள்கிறேன். ஏனெனில் போலிச் சிகிச்சையாளராக இருப்பவர்கள் பெரும்பாலும் கால்நடை வைத்திய அலுவலகம் சம்பந்தப் பட்டவர்களே. சில கால்நடை வைத்தியர்கள் அதிகரித்த வேலைப் பளு காரணமாகக் குறிப்பாக நீண்ட தூரத்திலுள்ள கால்நடைகளுக்கு சில வகை மருந்துகளை வழங்கி தமது அலுவலக ஊழியர்களுக்கு சிகிச்சையளிக்க சொல்கின்றனர். சிலர் தமது நட்பின் அடிப்படையில் மருந்துகளையும் சிகிச்சை ஆலோசனையையும் வழங்குகின்றனர். சில கால்நடை வைத்தியர்கள் தாம் ஒரு சட்டவிரோத சிகிச்சையாளனை உருவாக்குகிறோம் என்று தெரியாமல் இருக்கின்றனர். அன்றைய பிரச்சினைகள் தீர்ந்தால் சரி என இருந்து விடுகின்றனர்.

பல அரச கால்நடை வைத்திய அலுவலகங்களில் பயணத்துக்குக் குறிப்பாக நோய் சிகிச்சைக்கு எனப் போதிய எரிபொருள் இருக்காது. அலுவலக நேரம் தவிர்ந்த நேரத்தில் வரும் சிகிச்சைகளை செய்ய முடியாத நிலை. பெண் வைத்தியர்கள் சகல சந்தர்ப்பங்களிலும் சகல நேரங்களிலும் சகல இடங்களுக்கும் செல்ல முடியாத நிலையைக் காணமுடிகிறது. இப்படியான சூழலில் அலுவலக ஊழியர்கள் பெரும்பாலும் ஆணாக இருக்கும் போது குறைந்தபட்சம் வைத்தியர்கள் வழங்கும் மருந்துகளை விலங்குகளுக்கு செலுத்துபவர்களாக இருக்கிறார்கள். தொடர்ச்சியாக மருந்துகளை செலுத்தும் மேற்படி நபர்களைப் பண்ணையாளர்கள் நேரடியாக வைத்தியரிடம் செல்லாது அழைக்கும் நிலை ஏற்படுகிறது. இந்த மாதிரியான சந்தர்ப்பங்கள் போலி வைத்தியர்களை உருவாக்குகிறது. கால்நடை வைத்தியர்களுடன் தொடர்ச்சியாக வேலை செய்யும் அனுபவம் காரணமாகப் பல ஊழியர்களுக்கு அடிப்படையான சிகிச்சை நுணுக்கங்கள் தெரிய வருகிறது.



மிகச் சிக்கலான நோய் நிலைகள் மற்றும் பாரிய சத்திர சிகிச்சைகளுக்கு வேறு வழியின்றி வைத்தியரிடம் போக வேண்டும். மற்றபடி அவர்கள்தான். சில வைத்தியர்கள் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த படியால் மாலை நேரங்களில், வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் பிரிவில் இருக்க மாட்டார்கள். உள்ளூரில் உள்ள சிற்றூழியர்தான் அச்சமயங்களில் வைத்தியர். ஊழியர். எல்லாம். பண்ணையாளரும் குறைந்த செலவு ,உடனடிச் சிகிச்சை காரணமாக வைத்தியரைவிட அவர்களிடம் போகும் நிலை ஏற்படுகிறது. பெரு நகரங்களில் தனியார் சிகிச்சை நிலையங்கள் இருப்பதாலும் ஓரளவு வைத்தியர் ஊழியர் வித்தியாசம் தெரிதல் மற்றும் கல்வியறிவு மட்டம் அதிகம் என்பதால் அங்கு இந்த நிலை ஒப்பீட்டளவில் குறைவு. கிராமங்க



ளில் இது அதிகம். பண்ணையாளர்கள் சிகிச்சை செய்தால் அதுவும் குறைந்த விலையில் உடனடியாகச் செய்தால் போதும். அப்போது வருத்தம் மாறினால் சரி. முறையற்ற சிகிச்சையால் ஏற்படும் பக்க விளைவை அவர்கள் கருதுவதில்லை.

நான் கூறிய அலுவலக நிரந்தர ஊழியர்களை தவிர செயற்கை முறை சினைப்படுத்தல் செய்பவர்கள் தனியார் கால்நடை தீவன கடைக்காரர்கள் போன்றவர்கள் சட்டவிரோதச் சிகிச்சையாளராக செயற்படுகின்றனர். இந்த போலிக் கால்நடை சிகிச்சையாளருக்கு எப்படி மருந்து கிடைக்கின்றது என கேள்வி எழலாம். நான் முன்பு கூறியது போல சில கால்நடை வைத்தியர்கள் வழங்குவார்கள். மேலும், தற்போது உள்ளூர் மருந்து கடைகளிலும் சக்தி மிக்க மருந்துகளைப் பெற முடியும் நிலை உள்ளது. அங்கு எந்தவித வைத்தய பரிந்துரை சிட்டைகள் இன்றி யாருக்கும் மருந்துகள் வழங்கும் நிலை.

அண்மையில் எனது பிரிவில் ஒரு சட்ட விரோத சிகிச்சையாளருக்கு மிகச் சக்தி வாய்ந்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை வவுனியா நகரில் அமைந்துள்ள மிகப்பெரிய மருந்தகம் வழங்கியதை காண முடிந்தது. (பில் பெறுமதி 20000/-). இது தொடர்பாக மருந்துகளை வழங்கிய நிறுவனத்திடம் கேட்க தாங்கள் வழங்கவில்லை எனவும், விநியோகஸ்தர்கள் வழங்கியிருக்கலாம் என மழுப்பினர். இது தொடர்பாக இலங்கை கால்நடை மருந்து அதிகார சபைக்கு (veterinary drug control Authority) எனது முறைப்பாட்டை பதிவு செய்தேன். எனக்கு தெரிந்து அதன்பிறகும் பலருக்கு எந்தவித வைத்திய பரிந்துரை இன்றி அந்த மருந்தகம் பண்ணையாளருக்கு நேரடியாக மருந்துகளை வழங்குகிறது. அதாவது ஒரு கால்நடை வைத்திய அலுவலகம் போல நேரடியாக நோய் நிலையைச் சொல்லி மருந்தெடுக்கலாம். (அந்த மருந்தகத்தில் மனித மருந்துகள் பெற மருந்துச் சிட்டைகள் அவசியம்) இலங்கையில் மனித மருந்துக் கடைகளை மேற்பார்வை செய்வதற்கு உள்ளது போல கால்நடை மருந்தகங்களை மேற்பார்வை செய்ய இறுக்கமான நடைமுறைகள் இல்லை. ஏதாவது முறைப்பாடு செய்தால் மாத்திரமே கண்டியிலுள்ள கால்நடை மருந்து அதிகாரசபை பரிசோதிக்கும். அவ்வளவுதான்.

நீங்கள் ஒரு மாடு வைத்திருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு ஒரு சாதாரண நோய் ஏற்படுகிறது. தீவனத்தைக் குறைக்கிறது. ஒரு கால்நடை வைத்தியரை அழைக்கிறீர்கள். ஊசி போடுகிறார். மாடு சரியாகிறது. ஒரு சிகிச்சை கட்டணத்தை வழங்குகிறீர்கள். அந்த வைத்தியரை அழைக்காமல் ஒரு சட்ட விரோதச் சிகிச்சையாளரை அழைக்கிறீர்கள். அவரும் ஊசி போடுகிறார். மாடு சரியாகிறது. அதாவது இருவரிடமும் மருந்துகள் உள்ளன. இருவருக்கும் கட்டணம் வழங்குகிறீர்கள். எப்படியும் கால்நடை மருத்துவம். பட்டப்படிப்பு முடித்த வைத்தியருக்கு அதிகமாக கொடுக்க வேண்டித்தான் வரும். சட்டவிரோதச் சிகிச்சையாளர் ஒரு சிறிய இலாபத்தை வைத்து உங்களுக்கு சிகிச்சை செய்ய உங்களுக்கு அவரை பிடித்து போக தொடர்ந்து அவரையே பிடிக்கிறீர்கள். உங்களுக்குத் தேவை குறைந்த செலவு. அவ்வளவுதான்.

ஒரு கட்டத்தில் பெரிய நோய் ஒன்று ஏற்பட சட்ட விரோதியின் சிகிச்சை பலனளிக்காமலோ மருந்தின் பக்க விளைவாலோ கால்நடை இறக்கிறது அல்லது பாதிக்கப்படுகிறது என்றால் நட்டம் யாருக்கு? நீங்கள் சிகிச்சையைப் பற்றிக் கேட்டால் அந்த நபர் இனி உங்களிடம் வரமாட்டார். நீங்களும் வைத்தியரிடம் போக முடியாத நிலை. அநியாயமாக உங்கள் முக்கிய வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை தோன்றுகிறது.

சில கால்நடை மருந்துகள் சில கால்நடை இனங்களுக்கு பக்க விளைவை (side effects) ஏற்படுத்தும். சில ஒவ்வாமையை (Allerygy) ஏற்படுத்தும். மரணத்தை உண்டு பண்ணக் கூடியவை. சில மருந்துகள் மனிதனுக்குப் பாதிப்பை தரக் கூடியன. அவற்றை பால், இறைச்சி தரும் உற்பத்தி விலங்குகளுக்குத் தர முடியாது. சில மருந்துகள் வேறு மருந்துகளுடன் இணைந்தால் கடும் பக்க விளைவை ஏற்படுத்தும்.

மருந்துகள் கால்நடைகளுக்கு இனத்துக்கு இனம் வேறுபட்ட தாக்க இயல்புகளை கொண்டவை. ஒவ்வொரு மருந்துக் கம்பனி மருந்துகள் கூட வேறுபட்ட இயல்புகளை கொண்டவை. ஒரு விலங்குக்கு மருந்தை வழங்குவதில் பல விடயங்களைப் பார்க்க வேண்டும். எனவே வெறுமனே ஊசியை போட்டோம் வருத்தம் மாறியது என இருந்து விட முடியாது. பக்க விளைவுகள் நாட்செல்லவும் வரலாம். ஏதாவது ஒரு நோய் மாறி இன்னொரு நோய் வரக் காரணமாகலாம். நான் கூறிய காரணிகளை கால்நடை வைத்தியர்கள் கவனிப்பார்கள். சட்ட விரோத சிகிச்சையாளருக்கு எல்லாமே ஒன்றுதான்.

இந்த வாரம் முதல் சில வாரங்களுக்கு சட்ட விரோதக் கால்நடை சிகிச்சையாளர்கள் தொடர்பாக பல விடயங்களையும் அவர்கள் கால்நடை வளர்ப்பில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் பார்ப்போம்....





வேதநாயகம் தபேந்திரன்



"மாங்காய்களைச் சீவி வற்றல் போட்டு அதனைக் கறியாகச் சமைத்த ஒரு தலைமுறை இருந்தது. வறுமை காரணமாகக் கிடைக்கும் எந்தப் பொருளையும் சமைக்கும் பழக்கம் இருந்தது. பின்னாளில் வசதி வர வரச் சோம்பேறித்தனம் எம்மில் குடி கொண்டது. இயற்கை தந்த இரசாயனம் கலக்காத அருமையான வளங்களைப் பயன்படுத்த மறந்த அல்லது பயன்படுத்தத் தெரியாதவர்களாக மாறி விட்டோம்"

# சோழகமும் வாழைக்குலைகளும்

சித்திரை பிறந்து முடியும் நாள்களை அண்மித்துத் தொடங்கும் சோழகக் காற்று ஆடி பிறந்து சில நாளாகும் வரையில் வீசும்.

குலை போட்ட வாழைகளை விழுத்தித் தள்ளும். மாம்பழம், பலாப்பழம் சீசனும் வருவதால் வாழைப்பழங்களுக்கு மதிப்புக் குறைந்து விடும்.

முற்றிய வாழைக்குலைகளையும், முற்றாத பிஞ்சு வாழைக் குலைகளையும் என்ன செய்வதெனத் தோட்டக்காரர்கள் ஏங்குவார்கள்.

முற்றிய குலைகளை அகப்பட்ட விலைக்குக் கொடுத்துக் காசாக்குவார்கள். பிஞ்சுக் குலைகளை ஆடு மாடுகளுக்குத் தீவனமாகக் கொடுக்க வேண்டும்.

வாழைக்காய்களை வெட்டி அதன் பால் காய்ந்ததன் பின்னர் தான் தீவனமாகக் கொடுத்தல் வேண்டும். இல்லையேல் ஆடு மாட்டின் தொண்டை கட்டி இறந்து போய் விடும்.

தோட்டச் செய்கையுடன் இணைந்த கால்நடை வளர்ப்பு என்பது வருமானத்தை மட்டுமல்ல கால்நடைகளின் எரு சிறந்த இயற்கைப் பசளையையும் தரும்.

சிங்களப் பிரதேசங்களில் மாங்காய்கள் காற்றுக்கு விழுந்தால் அவற்றை எடுத்துச் சுவையான கறி சமைப்பார்கள். பலாக்காய் மிகுதியாகக் கிடைக்கும் காலங்களில் அவற்றை எடுத்தும் வகை வகையான கறி சமைப்பார்கள்.

இயற்கை தருகின்ற எல்லாவற்றையும் எடுத்துக் கறி சமைப்பார்கள். எமக்கு அது புதுவிதமான சுவையைத் தரும்.

எமது பிரதேசங்களிலும் சோழகக் காற்றுக்கு மாங்காய்கள் கொட்டி விழும். வாழைக்குலைகள் சரிந்து விழும். ஆனால் இவற்றைச் சுவையான கறிகளாகச் சமைக்கும் கைப் பக்குவம் எமக்கில்லை.

மாங்காய்களைச் சீவி வற்றல் போட்டு அதனைக் கறியாகச் சமைத்த ஒரு தலைமுறை இருந்தது. வறுமை காரணமாகக்



கிடைக்கும் எந்தப் பொரு ளையும் சமைக்கும் பழக்கம் இருந்தது.

பின்னாளில் வசதி வர வரச் சோமபேறித்தனம் எம்மில் குடி கொண்டது. இயற்கை தந்த இரசாயனம் கலக்காத அருமையான வளங்களைப் பயன்படுத்த மறந்த அல்லது பயன்படுத்தத் தெரியாத வர்களாக மாறி விட்டோம்.

கல்யாண மண்டபங்களும், கோயில்களுக்குக் கோடான கோடி செலவில் கட்டுமானங்களும் கட்டுகிறோம்.

உணவு பதனிடல் கைத்தொழிலுக்கு ஒரு சில இலட்ச ரூபாக் கூடக் கொடுப்பதற்கு வசதி படைத்தோருக்கு மனவசதி இல்லை.

விளைவு தக்காளிப் பழங்கள், கத்தரிக் காய்கள், பூசணிக் காய்கள், மாங்காய்கள், வாழைக்காய்கள் உட்படப் பல விளை பொருள்கள் அழுகிப் போகின்றன. எந்த விதப் பொருளாதார நலனும் தராமல் நாசமாகின்றன.

பொருளாதார நலன் தராத கட்டிடங்களில் கோடான கோடிப் பணம் கொட்டிக் கிடக்கிறது.

ஆனால் பொருளாதாரத்தையும் விவசாயிகளதும் மக்களதும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக் கூடிய உணவு பதனிடல் கைத்தொழில் தொடர்பாக மிக மிகக் குறைந்தளவு அக்கறையே செலுத்தப்படுகின்றது.

மேற்கத்தைய சமையலைப் போட்டி போட்டுக் கற்றுக் கொண்டு சமைப்பதில் செலுத்தும் நாட்டம் பக்கத்திலுள்ள சிங்கள மக்களைப் பார்த்து எமது வளங்களைப் பயன்படுத்துவதில் இருக்கவில்லை.

உழைப்புச் சேமிப்பு எனும் சங்கிலித் தொடரை விட இருப்பவற்றை உச்சப் பாவனைக்குப் பயன்படுத்துவதும் முதன்மையானது.

எமது தாயகத்தின் பொருளாதார உயர்வுக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு வளத்தையும் உச்சமாகப் பயன்படுத்துவதும் தேவையான ஒன்றாகும்.

# கறவைப் பசு வளர்ப்பின் மூலமாக இலாபம் பெற்றுக்கொள்வது எப்படி?



பொதுவாகக் கறவைப் பசுக்களில் மேலைத்தேய கறவைப் பசுக்கள் மற்றும் நாட்டுக் கறவை பசுக்கள் என இரு வகையாகப் பிரிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

மேலைத்தேயக் கறவை இனங்களான ஜெர்சி பிரிசியன், அயர்சயர் போன்ற பசுக்களை இலங்கையில் குறிப்பாக வட கிழக்கில் பண்ணையாளர்கள் வளர்க்க முற்படுவதில்லை. காரணம் காலநிலை ஒத்துப் போகாமல், இறந்து போக வாய்ப்பு உள்ளது. அத்தோடு வருமானத்திற்கு ஏற்றால்போல் அதிக செலவினத்தை ஏற்படுத்தும். சாதாரணக் கட்டமைப்பில் வளர்க்க முடியாது.

புதிதாக பண்ணை ஆரம்பிக்க இருக்கும் நண்பர்கள் நாட்டு கறவை இனங்களில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த கறவை இனங்களைத் தேர்வு செய்கிறார்கள்.

காரணம், வடகிழக்கு காலநிலையில் நன்கு தாக்குப்பிடித்து வளரக் கூடிய பண்புடையது.

அத்தோடு பராமரிப்புச் செலவு குறைந்த அளவே இருக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தி சற்று அதிகமாக இருக்கும்.

நாட்டுக் கறவை இனங்களை தேர்வு செய்து பண்ணை அமைப்பதாக இருந்தால் ஆரம்ப கட்டத்தில் குறைந்தது 12 பசுக்களை வைத்து பண்ணை அமைக்க வேண்டும்.

காரணம், ஐந்து பசு வளர்த்தாலும் 10 பசுக்கள் வளர்த்தாலும் செலவில் சிறிய மாற்றமே ஏற்படும்.

அதாவது ஒரே வகையான செலவாக இருக்கும். ஆனால் இலாபத்தில் பெரிய மாற்றம் ஏற்படும்.

6 பசு வளர்த்தாலும் பராமரிப்பதற்காக ஒருவர் தேவைப்படும். 12 பசு வளர்த்தாலும். ஒருவர் போதுமானதாக இருக்கும்.

செலவுகள் எவ்வளவு?

12 நாட்டுப் பசுக்களில் பண்ணை ஆரம்பிப்பதாக இருந்தால் ஏற்படும் செலவுகள் எவ்வளவு வரும் எனப் பார்ப்போம்.

12 பசுக்கள் கொள்வனவு செய்வதற்குரிய செலவுகள் அண்ணளவாக 3600000/= தேவைப்படும். (இதிலிருந்து கூடி. குறைய வாய்ப்புள்ளது)

12 பசுக்களுக்கு உரிய மாதாந்த அடர் தீவன செலவாக 55000/= தேவைப்படும்.

பண்ணையில் கிணறு அல்லது குழாய்க் கிணறு இருக்கும் பட்சத்தில்

12 பசுக்களுக்கு தேவையான புல் உற்பத்திக்குரிய ஆரம்பகட்ட நீர் கட்டமைப்பு செலவாக 300000/= தேவைப்படும். இச் செலவானது ஆரம்ப கட்டத்தில் செய்யப்பட்டால் 12 பசுக்களுக்கும் ஐந்து வருடங்களுக்கு போதுமானதாக இருக்கும்.

அத்தோடு பசுக்களுக்கு தேவையான மேலதிக நீர் கட்டமைப்பு செலவாக 20000/= செலவாகும்

மாடுகள் பராமரிப்பாளர் செலவாக 40,000 ரூபாயிலிருந்து 45,000 வரை மாதாந்தம் செலவாகும்.

12 மாடுகளுக்கு உரிய கொட்டகை அமைப்புச் செலவு 500000/= ரூபாய் தேவைப்படும்.

இது ஆரம்பக் கட்டத்தில் செய்யப்படும் நிரந்தரச் செலவு மட்டுமே.

மேலதிகமாகப் பண்ணையில் மின்சார கட்டமைப்பு இருக்க வேண்டும்.

கிடைக்கும் இலாபம்

முதல் ஆறு மாதத்திற்கு ஆறு பசுக்களில் பால் கறப்பதாகவும் அடுத்த ஆறு மாதத்திற்கு மற்ற ஆறு பசுக்களில் பால் கறப்பதாகவும் எடுத்துக்கொண்டால் எவ்வளவு கிடைக்கும்?

நாளொன்றுக்கு 75 லீட்டர் பால் கறக்க கூடிய வகையில் இருக்கும்.

தற்பொழுது ஒரு லிட்டர் பாலின் விலை 150 தொடக்கம் 160 ரூபாய் வரை உள்ளது.

ஆகையால் 75 × 30 × 150 மாதம் ஒன்றுக்கு பாலின் மூலம் 337500/= ரூபாய் வீதம் கிடைக்கும். இந்த வருமானம் ஒரு வருடம் வரை கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

அத்தோடு ஒரு வருட முடிவில் மேலதிக லாபமாக ஒரு வயது நிரம்பிய 12 கன்றுகளின் மறைமுக இலாபமாக 1200000/= ரூபாய் வரை கிடைக்கும்.

அத்தோடு முதல் வருடத்தில் கிடைக்கும் வருமானம் அடுத்த வருடங்களில் இரட்டிப்பாக கிடைக்கும்.

குறிப்பு

நாட்டுக் கறவை இனங்களில் குறிப்பாக இலங்கையில் பால் உற்பத்திக்காக ஓரிரு வகையான கறவை இனங்கள் தேர்வு செய்யப்பட்டு வளர்க்கப்படுகின்றன. அவை யாவன -

1. சிந்தி
2. சாஹிவால்
3. ஹரியானா
4. ஜெர்சி கலப்பு

மேற்குறிப்பிட்ட இனங்களில் பண்ணையாளர் தேர்வு செய்யும் இனத்தைப் பொறுத்து இலாபம் மாறுபடும். ஆனால், செலவினம் மாறுபடாது

அத்தோடு பண்ணையாளரின் சாமர்த்தியத்தை பொறுத்து லாபம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அதாவது ஒரு பசுவிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 3.5 டன் சாணம் உற்பத்தி செய்யக்கூடியவாறு உள்ளது.

1 டன் காய்ந்த சாணம் 15000/= ஆகும்
12×3.5×15000 – 630000/=

ஆகவே சாமர்த்தியமான பண்ணையாளர்களால் பசுக்களின் சிறுநீர் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தலாம்.

இங்கு குறிப்பிட்டுள்ள கட்டுரை இலங்கை பண்ணையாளர்களுக்கு மட்டும் பொருந்தக் கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள பண்ணையாளர்கள் தங்களுடைய பெறுமதிக்கு ஏற்றால் போல் விலைப்பட்டியலை மாற்றி கணக்கிட்டுக் கொள்ளலாம்.

மேலதிக ஆலோசனை தேவையெனில் தொலைபேசி ஊடாக என்னைத் தொடர்பு கொள்ளவும். **Ph: 0770239784**



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

இப்பதான் கிட்டத்திலை ஈச்சம் பழக் காலம் முடிஞ்சது. ஈச்சம் பழக் காலம் எண்டதுந்தான் எங்கட கடற்கரை வழியை கடற்கரை பனந்தோட்டம் வழியை உந்த ஈச்ச மரப் பத்தைகள் நிறைய நிண்டது ஞாபகம் வருகுது. உப்பிடி உந்த ஈச்ச மரம் உப்புக்காத்து வீசிற களர் நிலத்திலை தான் நல்லாமதாளிச்சு வளரும் எண்டதை “களர் வளர் ஈந்தின் காழ் கண்டு அன்ன” (பெரும் 130) பெரும்பாணாற்றுப் படை சொல்லுது எண்டு ஆச்சி சொல்லுறவ. உந்த ஈச்சம் காயள் பங்குனி சித்திரை மாசத்திலை காச்சு நல்ல சிவப்பு சிவப்பு மணியள் மாதிரி பொளிச்சுப் பொளிச்சு எண்டு வெய்யிலிலை மினுங்கும் . உப்பிடி உந்தக் காயள் சிவப்புச் சிவப்பா இருக்கிறதை அகநானூறு “செம் காய் உதிர்ந்த பைம் குலை ஈந்தின்” (அகம் 21/20 ) எண்டு சொல்லுது எண்டு அப்பு சொல்லுறவர் . அதுமாதிரி உந்த ஈச்சம்காயள் குலை குலையா இருக்கிறதைப் பாக்க நல்ல வடிவா இருக்கும் . உப்பிடி உந்த ஈச்சங்காயள் குலை குலையா இருக்கிறதை “கற்றை ஈந்தின் முற்று குலை அன்ன” (நற் 174/1) எண்டு நற்றிணை சொல்லுது எண்டுவா ஆச்சி .

நாங்கள் முந்தி சின்னப் பெடியளா இருக்கேக்கை உந்த ஈச்சம் குலையளை வெட்டியந்து உப்புத்தண்ணி தெளிச்சு வைக்கல் பட்டறையுக்கை வைப்பம் இல்லாட்டில் சாக்குக்கை மூடிக் கட்டி வைப்பம். ரெண்டு மூண்டு நாளிலை நல்ல கன்னங்கரேல் எண்ட பழங்கள் வந்திருக்கும். உப்பிடி உந்த ஈச்சம் பழங்கள் கறுப்பா நல்ல சதைப்பிடிப்பா இருக்கிறதை “கரும் களி ஈந்தின் வெண் புற களரி” (நற் 126/2) எண்டு நற்றிணை சொல்லுது எண்டுவார் அப்பு . எங்கட ஆக்கள் சங்க காலத்திலை உந்த ஈச்சம் பழத்தை திண்டிருக்கிறாங்கள் எண்ட விஷயம் உதிலை இருந்து விளங்குது எண்டுவா ஆச்சி .

முந்தி நாங்கள் எங்கிகினேக்கையும் கொஞ்சம் காயள் முத்தட்டும் எண்டு பாத்து வைச்சுப்போட்டு வருவம் . பேந்து ரெண்டு மூண்டு நாட்கள் கழிச்சுப் போனம் எண்டால் ஆரும் அதுகளை வெட்டிக்கொண்டு போயிருப்பாங்கள் . உதால நாங்கள் சில வேளை ஆவேசத்திலை ஆரும் வந்த வெட்டினாலும் எண்டு போட்டு கொஞ்சம் முத்தாத குலையளை வெட்டியந்து வைக்கல் பட்டறையுக்கை வைப்பம். பேந்து ரெண்டு மூண்டு நாட்கள் கழிச்சுப் பாத்தால் அதுகள் பழுக்காம சுருங்கி காஞ்சுபோன ஆட்டுப் புளுக்கை மாதிரி வந்திருக்கும். பேந்தென்ன அள்ளிக்கொண்டே அடிவளவுக்கை கொட்ட வேண்டியதுதான் . முந்தி ஈச்சம் பழம் விக்கிறதை சிலர் தொழிலாச் செய்தவை. முக்கியமா பெண்டுகள்தான் செய்தவை அவை பள்ளிக்க வாசல்களிலை இல்லாட்டில் கோயில் வாசல்களிலை இல்லாட்டில் சந்தி வழியை இருந்து விப்பினம். அப்பெல்லாம் ஒரு சுண்டு ஈச்சம்பழம் அம்பெசாம்.

சித்திரை வரியப்பிறப்பு அண்டைக்குத் தான் எங்கட வாரிவளவுப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா நடக்கும் . முதல் நாள் இரவு தேரைச் சோடிக்கேக்கை நாங்கள் நொங்கு, இளநி, வாழை, கமுகு, கரும்பு, உதுகளோடை உந்த ஈச்சம் பழக் குலையளையும் தேரில கட்டிச் சோடிப்பம். உந்த ஈச்சம் பழத்திலை பொட்டாசியம், கால்சியம், பொஸ்பரஸ் இருக்கிறதாலை எலும்புத் தேய்மானத்துக்கு நல்லம். அதோடை கண் பார்வைக்கு நல்லம் . கண் புரை வந்தால் ஈச்சம் பழம் திண்டால டக்கெண்டு மாறும். பிள்ளைத்தாச்சியள் திண்டினம் எண்டால் வயித்திலை உள்ள குழந்தையளுக்கு பலவிதத்திலும் நல்லம். அதோட நரம்பு தளர்ச்சியால் பாதிக்கப்பட்டு தாம்பத்திய உறவில ஆர்வம் இல்லாத ஆம்பிளையளுக்கு, மலட்டு தன்மை உள்ள ஆம்பிளையளுக்கு நல்லம் எண்டு எங்கட பரியாரி துரைப்பெடி சொல்லுறவர் எண்டு அப்பு சொல்லுவார். நான் நினைக்கிறன் எங்கடை அப்பு ஆக்கள் அந்தக்காலத்திலை உந்த ஈச்சம் பழங்களை நல்லாத் திண்ட படியாலைதான் நல்ல உசாரான ஆம்பிளையளா இருந்தவை ஆச்சிமாரும் அவையுக்கை அடங்கிக்கிடக்கிறதே தங்கடை பொழுதெண்டு இருந்தவை .

முந்தி நாங்கள் காஞ்ச ஈச்ச மர இலைகளை வெட்டித் தடியளை எடுத்து பட்டம் கட்டிறனாங்கள் . சில இடங்களிலை கூடை எல்லாம் பின்னிறவை . எங்கட சில ஆக்கள் வேலிக் கதியாலை மாடாடுகள் காந்தாமல் இருக்க எண்டு போட்டு உந்த ஈச்சம் ஓலையளை வெட்டியந்து வேலிக்கு வைச்சுக் கட்டுவினம். உப்பிடிக் கட்டேக்கை கவனமா இருக்க வேணும் ஈச்சம் இலை நுனியிலை இருக்கிற முள்ளுக் குத்திச்சுது எண்டால் அந்த இடம் காச்சுப்போகும். சில நேரம் ஈச்சம் குலை வெட்டப் போற ஆக்களுக்கும் உந்த ஈச்சம் முள்ளுக் குத்தி கைவழியை காயள் வரும்.

இப்ப எங்கடை கனசனம் நாகரீகம் எண்ட பெயரிலை உந்த ஈச்சம் பழம் மாதிரிப் பழங்களைத் தின்னிறதை விட்டுப் போட்டு அதுகும் உந்த வெளிநாட்டுக்காசு வந்த பிறகு கண்ட கறுமம் பிடிச்ச பழங்களையும் வாங்கித் திண்டு காசையும் கரியாக்கி நோய்காவியளாகவும் வந்திட்டிதுகள்.பேந்து டாக்குத்தர்மாருக்குக் கொண்டு போய்க் காசைக்கொட்டுங்கள். இப்பத்தே பெடிபெட்டையள் கனபேருக்கு உப்படியான பழங்கள் இருக்கெண்ட சங்கதியே தெரியாது. உண்ணாண எங்கடை பாரம்பரியப் பழங்களை தின்னிறதாலை காசு கன வழியளிலை மிச்சமாகும் எண்டதோடை வாதை வருத்தம் இல்லாமலும் சீவிக்கலாம் கண்டியளோ. எண்டபடியாலை அதுகளின்ரை உற்பத்தியளை அதுகளின்ரை பாவனையளை என்னவிதப்பட்டும் நாங்கள் ஊக்குவிக்க வேணும் கண்டியளோ.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.06.2023இல் வெளியிடப்பெற்றது.